# மண்

ஜேர்மனி / 2017
புரட்டாதி - ஐப்பசி
September - October

இதழ் 185



## அன்னை திரேசா

Mother Teresa
27.08.1910 - 05.09.1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் காணாமல்போன உறவுகளின் போராட்டம்



Digitized by Noolaham Fo
noolaham.org | aavanahar

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

கடந்த 30-08-2017நாள் சர்வதேச அளவில் காணாமல் போனோருக்கான தினமாக அனுஷ்டிக்கப்பட்டது.இலங்கையில் வவுனியாவில் 2014 ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி பன்னாட்டு காணாமற்போனோர் நாள் நிகழ்வும், ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றிருந்தது. சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு, செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை சார்ந்த அமைப்புகள் இந்த தினத்தை முன்கொண்டு செல்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் யுத்தகாலத்திலும், யுத்தத்துக்குப் பின்னரும் ஆயிரக் கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர். அத்துடன் கடந்த காலத்தில் இடம்பெற்ற வெவ்வேறு கலவரங்களின் போதும் அதிக எண்ணிக்கையானவர்கள் காணாமல் போயுள்ளனர்.இவ்வாறு சுமார் 25 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காணாமல் போய் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது உறவுகளை தேடித்தருமாறு இலங்கை அரசுக்குப் பல ஆழுத்தங்களைக் கொடுத்தும் எந்தவித பலனும் கிட்டவில்லை. ஆர்பாட்டங்கள் பேரணிகள் நிகழ்திப்பார்த்தார்கள். வீதி மறியல் போராட்டங்கள் நடத்திப் பார்த்தார்கள். பள்ளிக்கூடம் பல்கலைக்கழக மாணவர்கள்கூட ஆர்பாட்டம் நடத்திப் பார்த்தார்கள் முடிவில்லை. அனைத்து முனைப்புப் போராட்டங்களும் தொடர்கின்றன. அரச தரப்போ விசாரணைக்குழு, காணாமல் போனோரை கண்டறியும் ஆணைக்குழு என்று கூறுகின்றது. உரிய பதிலும் இல்லை. காணாமல் போனவர்கள் பற்றிய முடிவும் இல்லாமல் அரசு ஏமாற்றிக் காலத்தை இழுத்தடித்து அடுத்த தேர்தலுக்கான வியூகங்களை முன்னெடுப்பதிலேயே முனைப்பாக இருந்து வருகின்றது.

தமிழ்தரப்பு அரசியல் வாதிகளும் தமது பதவிகளைத் தக்க வைப்பதிலும் அடுத்த தேர்தலைநோக்கிய செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றனர். காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு எந்த நல்ல முடிவையும் தேடிக்கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை. ஆகவே இந்த அரசியல் வாதிகள் தற்கால அரசியல் நிலமைகளைக் கருத்திற்கொண்டு தீர்வுகாண வேண்டும். இல்லையேல் அடுத்த தேர்தலில் மக்கள் பதில் கூறுவார்கள் என்பது நிஜமாகும்!... -ஆசிரியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களுக்கு எச்சரிக்கை விட்ட நீதிபதி இளஞ்செழியன்....



யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் புலம்பெயர் தமிழர்களுக்கு எச்சரிக்கையோடு சேர்ந்த தெளிவான தகவல்களை விடுத்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகின்றது.

அதாவது வெளிநாட்டில் வாழும் நீங்கள் உங்கள் உறவுகளுக்காக பணத்தை அனுப்புகிறீர்கள் கேட்கும் பொருட்களை வாங்கி கொடுக்கின்றீர்கள். அவர்களும் நல்ல தூக்கம் நல்ல சாப்பாடு எந்த கஸ்ரமும் உணராதவர்களாய் வாழ்கின்றனர்...

- இவர்களின் எதிர்காலம் உங்களால்தான் அழிக்கப்படுகின்றது என்பது உங்களுக்கு தெரியுமா?
- வேலை தேடாமல் சோம்பேறிகளாக வாழ்வது உங்களுக்கு தெரியுமா?
- வீதிகளில் செய்யும் ரவுடிதனம் உங்களுக்கு தெரியுமா ??
- சிறுவயதில் போதைக்கு அடிமையாகுவது உங்களுக்கு தெரியுமா?
- இதெற்கெல்லாம் காரணம் நீங்கள் அனுப்பும் பணம்தான்..!
- அவர்கள் என்ன செய்கின்றனர் என்று உங்களால் கண்காணிக்க முடியுமா???
- நம் சமுதாயம் சீர்கெடாமல் இருக்க வேண்டுமானால் வளர்ந்துவரும் இளைஞர் யுவதிகள்தான் வழி நடத்த வேண்டியவர்கள்.
- அவர்களே சமுகத்தை சீர்கெடுத்தால் எப்படி? நாமும் ஒரு காரணமாக இருக்க கூடாது..! என புலம்பெயர் தமிழர்களுக்கு உறைக்கும்படி கேட்டிருக்கிறார்.
- உண்மைதான் யாழ்ப்பாணம் முதல்மாதிரியில்லை . அவர்சொன்னது உண்மைதான்! அளவுக்கு அதிகமாக பணம் அனுப்பகூடாது என ஏனைய மாவட்டங்களிலுள்ள அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## தொன்மை மறவேல்...

பொங்கல் பண்டிகை, தீபாவளி, புதுவருடம் இப்படிப் பல பண்டிகைகளைக் கொண்டாடுகின்றோம். ஊரில் திருவிழாக்கள் நடக்கின்றன. திருமண நிகழ்வுகள், புதுமனைப்புகுவிழா, வெள்ளிவிழா என இத்தகைய கொண்டாட்டங்களை இப்படி...இப்படிக் கொண்டாட வேண்டும் என்று நம் பெரியோர்கள் சில விதிமுறைகளை சடங்குகளை விதித்திருக்கிறார்கள். அவை பன்னெடுங்காலமாகக் கையாளப்பட்டு வருகின்றன. இதேபோல் ஒவ்வொரு வீட்டிலும் குடும்ப பாரம்பரியமாகச் சில சடங்குகளும் கடைப்பிடிக்கப்படும். இன்றைய நாகரீக மனப்பான்மையோடு "இதெல்லாம் என்ன பத்தாம் பசலித்தனம்" என்று உதாசீனம் செய்யக்கூடாது. சடங்குகளை மதித்து மறக்காமல் செய்ய வேண்டும். தொன்மை என்றால் பழமை என்றும் பொருள்படும்...

## தோற்பன தொடரேல்...

ஒரு காரியத்தைச் செய்ய முற்படுகின்றான் ஒருவன். அக்காரியத்தில் அவனுக்கு அனுபவமில்லை. அதன் நெளிவு சுளிவுகள் தெரியாது. அவன் திறனுக்கு, தகுதிக்கு அப்பாற்பட்ட செயல் அது. அச் செயலில் தன்னால் வெற்றி பெறமுடியாது என்று தெரிந்திருந்தும் வீம்புக்காக அதைச் செய்கிறான். அதைப்பற்றி அறிந்து அவன் நண்பர்கள் வேண்டாம் என எச்சரிக்கிறார்கள் ஆனாலும் பிடிவாதமாக அதில் ஈடுபடுகின்றான் அவன். எதிர்பார்த்தபடியே அவனால் அதை முடிக்க முடியவில்லை. தோல்வி அடைகின்றான். உழைப்பு, பொருள், காலம் அத்தனையும் பாழ். வேதனையும் வெறுப்பும் அடைகின்றான். வீம்பும் பிடிவாதமும் அவனுக்குத் துன்பத்தைத் தந்தன. ஆகவே முடியாத காரியங்களை, தோல்வி அடையக்கூடிய செயல்களை ஆரம்பிக்காதே என்கிறார் ஔவைப்பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றைவேந்தன்... (தொடர்ச்சி)

47.தோழனோடும் ஏழைமை பேசேல்...
சினேகிதனோடும் உனது வறுமையைப் பற்றிப் பேசாதே. அதாவது ஒருவன் தனது தோழனிடமும் ஏழ்மையை எடுத்துச் சொல்லக்கூடாது.

48-நல் இணக்கம் அல்லது அல்லற் படுத்தும்...
நல்ல சினேகிதம் அல்லாதது துன்பத்தையே தரும். ஆகவே நல்ல நட்புக்களைத் தேடிப் பெற்றுக்கொள்.

49-நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை...
நாடெங்கும் செழித்து வாழ்க்கை வளம் பெறுமானால் ஒரு கெடுதலுமில்லை. தேசம் எங்கும் செழித்திருந்தால் எவருக்கும் துன்பமில்லை.

50-நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை....
நிலைத்திருக்கும்படியான கற்றல் என்பது சொன்ன சொல் தவறாது இருத்தலாகும். அதாவது நிலையான கல்வி கற்றவன் எவன் என்றால் சொன்ன சொல் தவறாதவனே ஆவான்.

51-நீரகம் பொருந்திய ஊரகத்திரு...
நீர்வளம் மிக்க ஊரிலே வாழ். அதாவது நீர் வளம் மிக்க ஊரிலே நீ குடியிருப்பாயாக.

52-நுண்ணிய கருமமும் எண்ணித் துணி...
சிறிய கருமம் சிறிய தொழில் ஆயினும் எண்ணி நன்றாக யோசித்துச் செய்யத் துணிய வேண்டும். சிறிய கருமம் ஆயினும் நன்கு யோசித்த பின் செய்வதற்கு முற்படு.

53-நூான் முறை தெரிந்து சீலத்தொழுகு...
அறநூல்களில் விதிக்கப்பட்ட முறைகளை அறிந்து நல்ல ஒழுக்கமுடன் நடப்பாயாக. அதாவது அற நூல்களிலே சொல்லப்பட்டிருக்கும் முறைகளை அறிந்து நல்லொழுக்க வழியில் நடப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு....

அன்பு என்பது எல்லா உயரிகளிடத்தும் மனதில் உதிக்கும் ஓர் இனிய உணர்வாகும். மனிதப்பிறவி எடுத்த நாம் பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்தி உதவி செய்து அவற்றை நேசித்து செய்நன்றி மறவாது வாழ்தல் வேண்டும். இதனையே "அன்பின் வழியது உயர்நிலை" என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். இறைவன் அன்பே வடிவானவர். அவர் உயிர்களிடத்தில் அன்பு கொண்டவர். பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்தி வாழதலே இறைவனுக்கு நாம் செய்யும் பெருந்தொண்டாகும்.

நாம் எமது வீட்டில் அம்மா, அப்பா, சகோதரர்கள், உறவினர்கள், மீது அன்பு செலுத்துகின்றோம். இவர்களைவிட அயலவர் மீதும் பிற உயிர்களிடத்தும் அன்புடன் பழக வேண்டும். பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்தி கருணைகாட்டி இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டாய் எத்தனையோ பெரியார்கள் வாழ்ந்தார்கள். சமய பண்பாட்டில் கூறப்படும் ஒழுக்க விழுமியங்களில் பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதலே முக்கியமான அறமாகப் போற்றப் படுகின்றது.

இவ்வுலகில் எல்லோரிடமும் அன்பு செலுத்தும்போது இறைவனின் அன்பையும் ஆசியையும் சமூகத்தில் நன்மதிப்பையும் பெறமுடியும். இறைவன் எமது உள்ளத்தில் வீற்றிருக்கும்போது நாம் அன்பும் பண்பும் உள்ளவர்களாக வாழமுடியும்....

செல்விரஜித்ரா ஆசீர்வாதம்
தமிழ்மொழிச்சேவைப் பாடசாலை
எசன் - யேர்மனி

---

நன்றிகள்!....
மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு

செல்வன் சிவகாந்த் சிவராசா
Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றதும்...கல்லாததும்....

செல்வி ஸ்ரீ ஆரணிகா
றீத் மிஷன் – கிளிநொச்சி

கல்லுப்பட்டி என்ற ஊரில் ஓர் உயர்நிலைப்பள்ளி. அதில் புகழேந்தி என்பவர் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். அவர் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் தீர்த்து வைப்பார். ஒருநாள் தமிழாசிரியரிடம்...அன்புச் செல்வன் என்ற மாணவன் "ஐயா!..எனக்கு ஒரு சந்தேகம்" என்றான்.

என்ன சந்தேகம்?..கேள்...என்றார் தமிழாசிரியர். என்னுடைய நண்பன் ஒருவன் மிகவும் நன்றாகப் படிக்கக்கூடியவன். தேர்வுகளில் நிறையவே மதிப்பெண்கள் எடுப்பான். பொது அறிவுப் போட்டிகளில் பங்குபற்றிப் பல பரிசுகளும் பெற்றிருக்கின்றான். ஆனால் தனக்கு எல்லாம் தெரியும் என்று நண்பர்களிடம் கூறி அவன் மார்தட்டுகிறான். இது சரியா என்பதே என் சந்தேகம் என்றான் அன்பு.

அது மிகவும் தவறான போக்கு. ஏனென்றால் பள்ளிப் பருவத்தில் ஒரு மாணவனுக்குத் தனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணமே வரக்கூடாது. அதுவே அவன் அறிவு வளர்ச்சிக்கு பெருந்தடையாக அமைந்துவிடும். நான் உண்மை நிகழ்ச்சி ஒன்றைக் கூறுகின்றேன். ஆங்கில மொழியையும் இலக்கண இலக்கியங்களையும் கரைத்துக் குடித்தவராக விளங்கினார் ஜோன்சன். அவரே ஆங்கில அகராதியையும் எழுதி வெளியிட்டவர். ஆங்கிலத்தில் தனக்கு நிகர் எவருமே இல்லை என மனப்பால் குடித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் ஆசிரியர் ஒருவர் ஜோன்சனிடம் அரிசித்திப்பிலி என்பதை ஆங்கிலத்தில் எப்படிச் சொல்வது? என்று கேட்டார்.

எவ்வளவோ முறை மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டு யோசித்துப் பார்த்தும் ஜோன்சனால் பதில் சொல்ல முடியவில்லை. திக்கு முக்காடிப்போய் திரு...திரு என விழித்தார். அப்போதே அவரது தலைக்கனம் தவிடுபொடியானது. அகராதிக்காரருக்கே அந்தக்கதி என்றால். அடுத்தவருக்கு அதோகதிதானே.

ஆகவே ஒருவன் என்னதான் தெரிந்திருந்தாலும் எல்லாம் தெரியும் என்று கூறுவது எவ்வளவு பெரிய அபத்தம் என்பதை அறிந்து கொண்டாயா என்று அன்புடன் கேட்டார் தமிழாசிரியர். "கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதை உணர்ந்துகொண்டேன் ஐயா..என்றான் அன்புச்செல்வன்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேஷம்போட்ட கழுதை....

ஒரு ஊரில் பெரிய காடு இருந்தது. பக்கத்துக் கிராமத்திலிருந்து அந்தக் காட்டுக்குள் ஒரு கழுதை வழிமாறி வந்தது. காட்டுக்குள் ஒருவர் மட்டுமே நடக்கக்கூடிய ஒரு மணல்சாலை வழியாக நடந்து அது களைத்துப்போனது.

தண்ணீர் குடிக்கலாம் என்று எண்ணி ஒரு ஓடைப்பக்கம் சென்றது. அந்த ஓடைப் பக்கத்தில் சில வேட்டைக்காரர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் தாங்கள் வேட்டையாடிய சிங்கம், புலி, மான், போன்ற மிருகங்களின் தோலை எல்லாம் அங்கிருந்த பாறைகள் மேல் காய வைத்திருந்தார்கள்.

இதைப்பார்த்த கழுதைக்கு ஒரு ஆசை வந்தது. உடனே ஒரு சிங்கத்தின் தோலை எடுத்து தன் உடம்பின் மேல் போர்த்திக்கொண்டது. பார்க்கச் சிங்கம் போலவே அது இருந்ததால் மற்ற மிருகங்கள் எல்லாம் அதைப்பார்த்துப் பயந்து ஒதுங்கிப் போயின. மிருகங்கள் எல்லாம் தன்னைப் பார்த்து பயந்து மரியாதையாக வழிவிட்டு ஒதுங்கிப் போனதைப் பார்த்துக் கழுதைக்கு கர்வம் தலைக்கேறியது.

மனிதர்களையும் பயமுறுத்தலாம் என்று நினைத்துக் கிராமத்துக்குப் போனது. சிங்கம்போல கர்ஜிக்க நினைத்துக் கத்தியது. அந்தக் குரல் கழுதையின் குரல்தான் என அறிந்துகொண்ட ஊரவர்கள் கழுதைக்கு நல்ல அடிபோட்டு ப்பாடம் புகட்டினர்.

அதற்குப் பின்னர் கழுதையை யாரும் மதிப்பதில்லை. யாரும் அதைப் பார்த்துப் பயப்படவும் இல்லை. ஆகவே இக்கதையின் மூலம் நாம் நாமாக இருக்கும் போதுதான் மதிப்படைவோம். அடுத்தவர்போல் வேடம் போட்டாலோ அல்லது அவரைப் போல நடந்துகொள்வதாலோ அவமானம்தான் மிஞ்சும் என்பதை அறிந்துகொள்வோம்.

செல்வி ச சாலியா
சுண்டுக்குளி மகளீர் கல்லூரி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையும் மனிதனும்........

இந்தப் பிரபஞ்சத்தில் அழகு நிறைந்த சக்தி வாய்ந்த மனிதனது வாழ்வுக்கு மிக முக்கியமான நீர், காற்று, சூரியன், மரங்கள் மற்றும் நட்சத்திரங்கள், காடுகள், மலைகள் என்று தொடங்கிச் சிந்தனையால் உருவாக்கப்படுகின்ற வாழ்நிலை தவிர்ந்த அனைத்துமே இயற்கையின் விந்தைதான்.

மனிதனும் இயற்கையின் ஒரு அங்கமாகவே உருவாகினான். மனிதன் மற்றைய விலங்குகளைப் போல் மனிதக்குரங்குகளாக மரங்களை நாடி வாழ்ந்தபோது முதல் கல் ஆயுதத்தை உருவாக்கியதில் இருந்தே செயற்கையான பொருளாதார உலகம் உருவாக ஆரம்பித்தது. மனிதனது பொருளாதாரத் தேவைகளின் நிமித்தமே செயற்கையோடு மனிதன் பின்னிப் பிணைக்கப்பட்டான்.

உழைப்பின் நிமித்தமாக உற்பத்திச் சாதனங்கள் உருவாக்கப்பட்டன. மனிதன் செயற்கையான உலகை உருவாக்கியதுடன் தனது வாழ்நிலையை மற்றைய தாழ்நில விலங்குகளிடமிருந்து என்றைக்குமாகப் பிரித்தே விட்டது. மனிதன் இயற்கையின் அங்கமாக இருந்தாலும் செயற்கையுடனான அவனது பொருளாதார உறவுதான் அவனை மற்றைய விலங்குகளிடமிருந்து பிரித்து அவனை உயர்ந்த நிலையிலுள்ள சிந்தனையுள்ள உயிரியாக உருவாக்கியது. மனிதன் இயற்கையை ஆழ்கிறான். அவன் அதை மாற்றவும் செய்கிறான்.

மனிதத் தோற்றமானது உயர்ந்த அறிவிற்கான இயற்கையின் தேர்வாக தவிர்க்க முடியாதவாறு உருவாக்கப்பட்டது. மனிதக் கண்டுபிடிப்புக்களும் வளர்ச்சியும் ஒருபுறம் விரிந்து பரந்த பிரபஞ்சத்தில் உயர்வை ஏற்படுத்தினாலும் இன்னொருபுறம் அழகிய இயற்கை மாசுபட்டு அழியத் தொடங்குவதால் மனிதவாழ்வுக்கே அது ஆபத்தாகி நிற்கிறது. நல்ல காற்றில்லை. சுத்தமான நீரில்லை என வாழ்க்கை கண்டுபிடிப்புக்களால் நெருக்கடிகளைச் சந்திக்கின்றது. எனவே இயற்கையின் அங்கமாகிய நாம் இந்த இயற்கையை பயனுள்ள முறையில் பாதகமில்லாத வழிகளில் செயற்கையாக மாற்றியும் இயற்கையை முழுவதுமாக அழிக்காது பாதுகாத்தும் அதன்மூலம் பயனடைவோம்....

செல்வி ருபின்யா லிங்கேஸ்வரன்
தமிழ்மொழிச்சேவைப் பாடசாலை – எசன் – யேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகளும் விடைகளும்.....

01-எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுத்து வட்டக்குடை பிடித்து வருகின்றார் துரை மகனார் இவர் யார்..

02-விரிந்த ஏரியிலே வெள்ளோட்டம் மிதக்குது. அது என்ன..

03-பகலில் தூங்குவான். இரவில் அலறுவான் அவன் யார்..

04-மஞ்சள்குருவி நெஞ்சைப் பிழந்துமகாதேவனுக்குப் பூசையாகுதுஅது என்ன..

05-பரட்டைத்தலை மாமியாருக்குப் பவளம்போல் மருமகள் அவள் யார்...

06-வெள்ளைக் கொல்லை கறுப்புவிதை கை விதைக்கும் வாய் கொறிக்கும் அது என்ன..

07-அமைதியான பையன் அடிக்காமல் அழுவான் அவன் யார்..

08-அதிவேகக் குதிரை ஆடியபடி செல்லும் குதிரை போட்ட கோட்டைத் தாண்டாமல் ஓடும் அது என்ன..

09-ஒரே வயிற்றில் வாழ்ந்தாலும் ஒரு பிள்ளை ஓடுவான் மற்றவன் நடப்பான் அவன் யார்...

10-ஊர் எல்லாம் திரிவான் உலகெல்லாம் இருப்பான் இவன் இல்லாவிழன் உயிர்வாழ முடியாது. இவன் யார்.

விடைகள்... நண்டு நிலா ஆந்தை வாழைப்பழம் அத்திப்பழம் கரும்பலகை அலாரம் ரயில்வண்டி கடிகாரமுள் காற்று

செல்வி நிசா முருகானந்தன்
ரீத் மிஷன் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 8

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 4 | | | 1 | | 5 | 7 |
| | | | | 7 | 4 | | | |
| 8 | | | | | 2 | | | 9 |
| | | | | | | 1 | | 5 |
| | 4 | | | | | | 6 | |
| 7 | | 5 | | | | | | |
| 6 | | | 1 | | | | | 2 |
| | | | 9 | 5 | | | | |
| 9 | 1 | | 7 | | | 5 | 3 | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 97
## (புரட்டாதி--ஐப்பசி-2017)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01–03 உலகின் முதற் தெய்வம்

13–15 கடிதம் ஒத்தசொல்.

வ – இ:

04–03 வீட்டுப்பிராணி

11–09 உலோகங்களில் ஒன்று

கீ – மே:

11–03 தமிழகத்தில் ஒரு நகரம்

14–06 ஊர்வன ஒன்று

மே – கீ:

01–09 இதுதான் உலக மகாசக்தி

04–16 பூமிக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்துகொள்வோம்...

01-வெள்ளை யானைகளின் நிலம் என்று அழைக்கப்படும் நாடு - தாய்லாந்து.

02-மலைகளின் நிலம் என்று அழைக்கப்படும் நாடு எது - மியன்மார் (பர்மா)

03-அரபிக் கடலின் ராணி எனப்படுவது - கொச்சின் (இந்தியா)

04-உலகில் மின்தடை இல்லா நாடு - குவைத்

05-பசுமைப் புரட்சி ஏற்பட்ட வருடம் நாடு எவை - 1960 மெக்சிக்கோ

06-அமெரிக்க பசுமைப் புரட்சியின் பிறப்பிடம் - போஸ்டன்

07-உலோக நாணயங்கள் இல்லாத நாடு - பரகுவே (தென் அமெரிக்கா)

08-பூச்சியத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு - இந்தியா

09-பாறைகளைப் பற்றிய படிப்புக்குப் பெயர் - பெட்ராலஜி

10-மிக வெப்பமான கோள் எது - வெள்ளி

11-சூரிய ஒளி பூமியை வந்தடையும் நிமிடங்கள் - 8.3 நிமிடங்கள்

12-மூன்று அடிப்படை நிறங்கள் எவை - சிவப்பு, மஞ்சள், நீலம்

13-சுத்தமான தங்கத்தின் கரட் - 24 கரட்

14-விமானத்தில் செல்பவர்களுக்கு வானத்தில் வானவில் தெரியும் வடிவம் - வட்டம்

செல்வி மௌசிகா மகேந்திரன்
ரீத் மிஷன் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினங்கள் பற்றி.....

01. ஒக்டோபஸ்சின் (கணவாய்) மூளையில் சராசரியாக 300 பில்லியன் நியூரோன்கள் உள்ளன.

02. நத்தைகள் 15 வருடங்களுக்கும் அதிகமாக வாழக்கூடியவையாகும்.

03. ராஜ நாகத்தின் விஷம் மிகவும் அபாயகரமானது. ஒரு கிறாம் விஷமானது 150 பேரைக் கொல்லக்கூடியது.

04. சுண்டெலியின் இதயத்துடிப்பு நிமிடத்திற்கு 650 தடவைகள்.

05. மின்மினிப்பூச்சிகளில் ஆண்மின்மினிப்பூச்சிகளே பறக்கக்கூடியவையாகும்

06. பூனைக்குட்டிகள் பிறக்கும்போது குருடாகவும் செவிடாகவும் காணப்படும்

07. உலகில் மிகச்சிறிய கிளி இனமாக பிக்மி (pygmy) கிளி இனமாகும். இந்தக் கிளிகளின் சராசரி நீளம் 8 செ.மீட்டராகும்.

செல்வி நிவேதா யதீஸ்குமார்
றீத் மிஷன் – கிளிநொச்சி

# பொன்மொழிகள்....

1. அன்பைச் செய்கிறவர்களால்தான் அன்பு இருப்பதாக உணரமுடியும். உண்மையான அன்பினால் தங்களைக் கொடுக்க முடியாதவர்களால் எங்குமே அன்பினை உணரமுடியாது.

2. நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகின்றாயஇ. நீ உன்னைப் பலவீனம் என்று நினைப்பதால் பலவீனனாகவே ஆகிவிடுகிறாய்.

3. அறிவுடையவன் அறிவு குறைந்தவன் மேல் செலுத்தும் ஆதிக்கத்தை விடவேண்டும்.

4. வெற்றியில் உனக்கு விருப்பம் இருக்குமானால் வாழ்க்கையில் ஆணவத்தை முற்றிலும் ஒழித்துவிடு.

செல்வி ஸ்ரீ சுகன்யா
றீத் மிஷன் – கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Sports Meet.....

We had our inter-house sports.-meet 20th of July . Many post pupils, parents and guest attended the meet. The cheif guest was special commissioner of Jaffna Municipal Council, Mr. V.P.Balasingam.

All three hauses named Bharathi, Elango and Valluvar took part in the Sportsmeet. I am in the Valluvar hause and we praticed for weeks. The house captains. games captains and teachers helped us during the preperation. The teacher in charge of our hause is Mrs.V. Susila.

Our house won the sports trophy. We became the first in most of the track-events. After all the track events there was a drill display by grade six and eight students. All the visitors admined it.

At last the commissioner gave away the certificats to the winners. Our sports-meet was a great success it was a happy day for all of us.

By...K .Daniyal Robensan
Sri Ahilandeswary Arulakam
Children home - Vavuniya

---

## Land என்ற சொல்லில் முடியும் பெயர்கொண்ட நாடுகள் சில.........

01-Deutschland
02-Estland
03-Letltand
04-Weisrussland
05-Russlnd
06-Niederland
07-Irland
08-NorthernIrland
09-Island
10-Finnland
11-Greesland
12-Scotland
13-Thailand
14-Greesland

tan என்ற எழுத்தில் முடியும் பெயர்கொண்ட நாடுகள்......

01-Pakistan
02-Afghanistan
03-Turkmenistan
04-Usbekistan
05-Kasachstan
06-Kirgistan
07-Tadschikistan
08-Bhutan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வடபகுதியில் "தீவு" "லை" "டி" என்ற எழுத்தில் முடியும் சில ஊர்களின் பெயர்கள்..........

"தீவு" என்ற சொல்லில் முடியும் ஊர்கள் சில...

01-நயினாதீவு
02-புங்குடுதீவு
03-எழுவைதீவு
04-அனலைதீவு
05-நெடுந்தீவு
06-மண்டதீவு
07-இரணதீவு
08-காக்கைதீவு
09-காரைதீவு
10-கேரதீவு
11-பாலைதீவு
12-முல்லைத்தீவு
13-விடத்தல்தீவு

"டி" என்ற எழுத்தில் முடியும் ஊர்கள்...

01-குரும்பசிட்டி
02-சங்குப்பிட்டி
03-கரவெட்டி
04-கைதடி
05-வல்வெட்டி
06-அல்லைப்பிட்டி
07-தையிட்டி
08-மயிலிட்டி
09-உடுப்பிட்டி
10-நெல்லியடி
11-கோவிலாக்கண்டி
12-தாவடி
13-அளவெட்டி
14-போக்கட்டி
15-கொட்டடி
16-சிறுப்பிட்டி
17-நீராவியடி
18-தாளையடி

"லை" என்ற எழுத்தில் முடியும் ஊர்கள் சில...

01-முகமாலை
02-சில்லாலை
03-இளவாலை
04-அரியாலை
05-பொன்னாலை
06-இருபாலை
07-கீரிமலை
08-சுதுமலை
09-இரணைப்பாலை
10-மீசாலை
11-சரசாலை
13-துன்னாலை
14-பன்னாலை
16-வங்காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

வாய்மை: –

291. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

292. பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

293. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

294. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்ல முளன்.

295. மனத்தோடு வாய்மை மொழியிற் றவத்தோடு
தானஞ்செய் வாரிற் றலை.

296. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

297. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

298. புறத்தூய்மை நீரா னமையு மகத்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

299. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

300. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனத்தோன்றும்
வாய்மையி னல்ல பிற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும் (உண்மையின் தன்மை)

291 உண்மை எனப்படுவது எது என்றால் யாருக்கும் தீங்கு உண்டாகாத சொற்களைச் சொல்வதே ஆகும்.

292. ஒருவர் பேசிய பொய் மொழியால் பிறர் நன்மை அடைந்தால் அப்பொய் மொழி உண்மையின் தன்மையைப் பெறும்.

293. தன் மனமறிந்து பொய் பேசக்கூடாது. பொய் பேசினால் அவனது மனமே அவனைத் தண்டித்துக்கொண்டிருக்கும்.

294. பொய் பேசக்கூடாது என்று உள்ளத்தில் நினைப்பவன் உலக மக்களின் உள்ளங்களில் எல்லாம் தங்கி இருப்பான்.

295. மனதினால் உண்மையே பேச நினைப்பவன் தானமும் தவமும் செய்பவனைவிடத் தலைசிறந்தவனாவான்.

296. பொய் பேசாது இருப்பதைப் போன்ற புகழ் வேறு இல்லை. அப்புகழே எல்லா அறங்களின் பயன்களையும் கொடுக்கும்.

297. ஒருவன் பொய்யாமையே செய்ய வல்லவனானால் அவன் பிற அறங்களைச் செய்யாமை செய்யாமை நன்று.

298. உடலின் தூய்மை தண்ணீரால் உண்டாகும். (அதுபோல) உள்ளத்தின் தூய்மை உண்மை பேசுவதால் உண்டாகும்.

299. இருள் நீக்கும் எல்லா ஒளியும் விளக்கல்ல. சான்றோர்க்குப் பொய் பேசாதிருப்பதே ஒளியூட்டும் விளக்காகும்.

300. யாம் உண்மையாகக் கண்ட செயல்களுள் எத்தன்மையிலும் உண்மை பேசுவதைவிட நல்ல செயல்கள் வேறு ஏதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு வினா விடைகள்.....

தன் வாழ்நாளில் நீரே அருந்தாத மிருகம் எது? - கங்காரு எலி
ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன? - ஏழு
பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்? - 330
உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது? - நெதர்லாந்து
நாய்கள் இல்லாத ஊர் எது? - சிங்கப்பூர்
தாஜ்மஹால் எந்தவகை மார்பிளால் கட்டப்பட்டுள்ளது? - மக்ரானா
நமது ஒவ்வொரு கண்ணிலும் எத்தனை தசைகள் உள்ளன? - ஆறு தசைகள்
கண்கள் இருந்தும் பார்வையில்லாத பிராணி? - வெளவால்
உலகிலேயே பெண் எம்.பிக்கள் அதிகம் உள்ள நாடு எது? - ஸ்வீடன்
நின்று கொண்டு தூங்கும் பிராணி எது ? - குதிரை
உலகில் மொத்தம் எத்தனை வானிலை ஆராய்ச்சி மையங்கள் உள்ளன? - 12,500
புயல் பற்றிய எச்சரிக்கை கொடுக்கத் துவங்கிய ஆண்டு ? 1886
மஞ்சள் ஆறு என அழைக்கப்படும் ஆறு ? - ஹோவாங்கோ ஆறு
உலகில் மிக அதிகமாக இஸ்லாமியர்கள் வாழும் நாடு எது ? - இந்தோனேசியா
மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடுஎது? - தென்னாப்பிரிக்கா
உலகிலேயே மிகவும் பெரிய தேசியக்கொடி கொடி கொண்ட நாடு எது? - டென்மார்க்
காவல் துறையில் முதன்முதலில் பெண்களைச் சேர்த்த நாடு எது? - பிரிட்டன்
கடல்களின் எஜமானி என அழைக்கப்படும் நாடு எது ? - இங்கிலாந்து
இந்தியாவையும் இலங்கையும் பிரிக்கும் நீர்ச்சந்து எது? பாக் நீர்ச்சந்தி
எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் என்ன? 8848 மீட்டர்கள்
எகிப்து நாகரீகம் தோன்றிய நதிக்கரை எது? நைல் நதி
அணுக் கொள்கையைஉருவாக்கியவர் யார்? ஜான் டால்டன் (john daltan)
தையல் இயந்திரத்தைகண்டுபிடித்தவர் யார்? ஐசக் சிங்கர்
தேசியக் கொடியில்சூரியன் வைத்துள்ள நாடு எது? அர்ஜெண்டினா மற்றும் உருகுவே
இயேசு கிறிஸ்துவின்தாய் மொழி என்ன? அராமைக் (Aramaic)
உலகின் மிகப்பெரிய நன்னீர் தீவு எது? மாஜூலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



**முகவரி.....**

"மழை வழங்கும் வானமே நீ வாழ்க" என்று நான்கு திசைகளும் வானத்தை வாழ்த்தின. காற்றுக்குச் சினம் பொங்கியது."என்ன கொடுமை வானமா வழங்கியது?" பூமிக்காகக் காற்று பொருமியது.

"நீர் கொடுப்பதோ பூமி பேர் எடுப்பதோ வானம்"

**ஒழுங்கு....**

தலைமை எறும்பு கூறியது "ஒழுங்காகச் செல்லுங்கள் பரிசு உங்களுக்குக் காத்திருக்கிறது" ஓர் எறும்பு "என்பாட்டில் நான் போவேன்" என்று வரிசையை உடைத்துக்கொண்டு தனிவழி போனது. சிறிது நேரத்தில் வரிசை குலையாமல் சென்ற எறும்புகளெல்லாம் வாயில் அரிசியோடு திரும்பி வந்தன. ஒற்றை எறும்பின் முகம் ஒடுங்கியது. நிரை குழம்பாத எறும்புகளில் ஒன்று சொன்னது..

"வரிசை பிளப்பான் பரிசை இழப்பான்"

**சூடு.....**

புற்றில் இருந்து வெளியே வந்த ஈசல் வெளிச்சத்தைத் தன் உடலில் தாக்கிப் பறந்த மின்மினியைப் பார்த்தது. அதன் அழகைப் புற்றீசலால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. "மின்மினியைப் போல் வெளிச்சத்தைத் தாக்கிப் பறக்க என்னாலும் முடியும்" என்று கூறிக்கொண்டே குடிசையில் எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கின் வெளிச்சத்தைத் தாக்கப் போனது புற்றீசல். பாவம் ஒரு நொடியில் அது எரிந்து கருகிப் போனது. குப்பி விளக்கு சொன்னது.

"பொறாமை எரிந்து போகும் புற்றீசல் கரிந்து போகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-159
## (புரட்டாதி - ஐப்பசி 2017)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-06 அகிலத்தின் அன்னை இவர்.
08-11 தானியம் ஒன்று (கு)
12-14 இளம் பெண்ணை இப்படியும் அழைப்பர்.
15-18 கவி படைப்பதில் வல்லவரை இப்படியும் அழைப்பர்.
47-49 உலோகங்களில் ஒன்று.

**வ-இ**

21-19 நம்நாட்டு மரம் ஒன்று இனிமையான பழம் தரும்.
24-22 ஒன்றுக்கும் உதவாதவரை இப்படியும் சிலர் அழைப்பர்.
32-30 குழந்தை ஒத்த சொல்.
35-33 தமிழர்கள் உயிர்போல இதையும் நேசிப்பர்.
45-43 நம் நாட்டு மரம் ஒன்று.

**கீ-மே**

33-19 உறுப்புக்களில் ஒன்று.
41-27 ஊர்வன ஒன்று.
44-30 பூ வகைகளில் ஒன்று.
45-38 இது கெட்டபின் இறைவழிபாடு என்பர்.
47-33 செல்வன் எதிர்பாற் சொல்.

**மே-கீ**

01-36 தமிழ் மண் இனவாதிகளால் இப்படிச் செய்யப்படுகின்றது.
04-39 தமிழர்கள் கூடுதலாக வாழ்ந்த இடம். சிறிது சிறிதாகக் குடிப்பரம்பலை இழந்துவரும் மாவட்டம்.
07-42 தமிழுக்குத் தொண்டு செய்த அடிகளார்.
46-39 வீதி என்றும் அழைக்கலாம்

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய சில நிகழ்வுகள்.... (புரட்டாதி-ஐப்பசி மாதம்)

## இலங்கை

04.09.1782-திருகோணமலைத் துறைமுகத்தை ஆங்கிலேயரிடமிருந்து பிரெஞ்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்டது. 1785 வரை இவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.

05.09.1990-மட்டக்களப்பு-வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்தவர்கள் 158 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நாள்.

07.09.1978-ரத்மலானை விமான நிலையத்தில் வைத்து அவ்ரோ விமானம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட நாள்.

09.09.1990-மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் 184 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நாள்.

12.09.1990-விடுதலைப் புலிகளின் யாழ் கோட்டை இராணுவ முகாம் தாக்குதலின்போது அரசின் குண்டுவீச்சு விமானம் சுட்டுவீழ்த்தப்பட்ட நாள்.

12.09.1841-முதன்முதல் யாழ்பாணத்தில் "உதயதாரகை" என்னும் பத்திரிகை வெளிவந்தது. தொடர்ந்து "சத்திய வேத பாதுகாவலன்" 1876லும் "இந்துசாதனம்" 1889லும் வெளிவந்தன.

18.09.1995-கொழும்பு-பலாலி பிரயாண அன்ரனோவ் இராணுவ விமானம் புத்தளம் கடற்பிராந்தியத்தில் விழுந்த நாள்.

23.09.1983-மட்டக்களப்பு சிறை உடைத்து தமிழ்ப் போராளிகள் தப்பித்த நாள்.

02.10.1982-விடுதலைப் போராளிகளான தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் கொழும்பு நீதிமன்றில் பிரசித்தி பெற்ற உரைநிகழ்த்திய நாள்.

03.10.1987-சிறிலங்கா-இந்திய உடன்படிக்கையில் 17 போராளிகள் இந்தியப் படையினரால் யாழ்குடாநாட்டில் கைதுசெய்யப்பட்ட நாள். 04.10.1957-பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் இனவாதிகள் கண்டி பாதயாத்திரை மேற்கொண்ட நாள். 05.10.1795-மன்னார்ப் பகுதி ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த நாள். 10.10.1987-இந்தியப் படைகள் - விடுதலைப் புலிகள் யாழ்குடாவில் போர் ஆரம்பித்த நாள்.

13.10.1953-பிரதமர் டட்லி செனநாயக்கா பதவி துறந்த நாள். 14.10.1948-இலங்கையில் முதல் பாராளுமன்றம் கூடிய நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.10.1982-இலங்கையில் முதலாவது ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற நாள்.ஜே. ஆர்.ஜெயவர்த்தனா வெற்றி பெற்றார்.
21.10.1987-இந்தியப் படைகள் யாழ் போதனா வைத்தியசாலையில் கண்மூடித்தனமான தாக்குதல் நடாத்தியதில் நோயாளிகளும் பொதுமக்களுமாக 68 பேர் படுகொலை செய்யப்பட்ட நாள்.
23.10.1991-கிளிநொச்சியில் செஞ்சோலைச் சிறுவர் இல்லம் விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட நாள்.
25.10.1994-ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர், அமைச்சர் காமினி திஸநாயக்கா படுகொலை செய்யப்பட்ட நாள்.
30.10.1995-வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய நிகழ்வு. யாழ் குடாநாட்டிலிருந்து பெருவாரியான தமிழர்கள் பிற இடங்கள் நோக்கிய இடம்பெயர்வு நாள்.

## பிரபலங்கள்:-

01.09.1980-தமிழ்வளர்த்த தனிநாயகம் அடிகளார் நினைவு தினம் (02.08.1913-01.09.1980)
02.09.1985-உடுவில் (மானிப்பாய்) பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் நினைவு நாள் (1918-1985)
08.09.1995-ஆன்மீகநெறி பரப்பிய ஆத்மஜோதி நா.முத்தையா நினைவு நாள் (25.05.1918-08.09.1995)
09.09.1947-கலாஜோதி ஆனந்த குமாரசாமி நினைவு நாள்(29.081877-09.09.1947)
16.09.1994-சத்திர சிகிச்சை நிபுணர் சு.பொன்னம்பலம் நினைவு நாள்.
17.09.1959-தமிழரசுக்கட்சியின் தலைவர்களில் ஒருவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கு.வன்னியசிங்கம் நினைவு நாள்.
19.09.1966-வித்துவான் வேந்தனார் நினைவு நாள் (05.11.1918-18.09.1966)
23.09.1987-இலவசக் கல்வியின் தந்தை கன்னங்கரா நினைவு நாள்
26.09.1959-பிரதமர் SWRD பண்டாரநாயக்கா நினைவுநாள் (1899-1959)
26.09.1987-உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த முதல்போராளி தியாக தீபம் திலீபன் நினைவு நாள்.(27.11.1963-26.09.1987)

07.10.1974-பட்டிருப்பு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் நினைவு நாள்.
10.10.2000-யாழ் ஊடகவியலாளர் நிமலராஜன் நினைவு நாள்.
30.10.1999-மலையகத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினருமான சௌமியமூர்த்தி தொண்டமான் நினைவு நாள்.
31.10.1811-வன்னியை ஆட்சி புரிந்த தமிழ் மன்னன் பண்டார வன்னியன் நினைவு நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் சில பிரபலங்கள்... (புரட்டாதி-ஐப்பசி)

03.09.1658-இங்கிலாந்தின் முடியாட்சியை நீக்கியவரான ஒலிவர் குறோம்வெல் நினைவு நாள்.
05.09.1997-அன்னை திரேசா நினைவு நாள் (27.08.1910-05.09.1997)
05.09.1872-கப்லோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரப்பிள்ளை பிறந்த தினம்(05.09.1872-11.11.1938)
09.09.1976-நவசீனாவின் தந்தை மா வோ சேதுங் நினைவு நாள் (26.12.1893-09.09.1976)
11.09.1921-மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவு நாள்.(11.12.1882-11.09.1921)
17.09.1906-தந்தை பெரியார் (இராமசாமி) பிறந்த நாள்.
18.09.1979-பிரபல பகுத்தறிவாளர் டாக்டர் ஏபிரகாம் கோவூர் நினைவு நாள்.
19.09.1950-மறைமலை அடிகள் நினைவு நாள்.
27.09.1895-லூயிபாஸ்டர் நினைவு தினம்.

02.10.1869-அகிம்சையின் தந்தை மகாத்மா காந்தி பிறந்த நாள்.
02.10.1904-இந்தியப் பிரதமர் லாபகதூர் சாஸ்திரி பிறந்த நாள்.
02.10.1975-தமிழ்நாடு முதலமைச்சர் காமராசர் நினைவு நாள்.(15.07.1903பிறப்பு)
06.10.1906-இந்திய பிரபல ஓவியர் ரவிவர்மா நினைவு நாள் (1848 - 1906)
18.10.1931-தோமஸ் அல்வா எடிசன் நினைவு நாள் (1847 - 1931)
21.10.1833-நோபல் பரிசுக்கு வித்திட்டவரான அல்பிரட் நோபல் பிறந்த நாள்.
31.10.1984-இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி நினைவு நாள்.

## கண்டுபிடிப்புக்களும் முக்கிய நிகழ்வுகளும்...

02.09.1774-பிரித்தானியரான பிறிஸ்ட்லி என்பவர் முதன் முதல் ஒட்சிசன் வாயுவைக் கண்டுபிடித்தார்.
03.09-1910-அமெரிக்கா-கொலிவூட்டில் முதன் முதல் திரைப்படம் தயாரிக்கப்பட்டது. படத்தின் பெயர் In Old California
06.09.1950-இளவயதினரை துடிப்புடன் எழ வைக்கும் றொக் பாடல்கள் அமெரிக்காவில் முதன் முதல் அறிமுகமானது.
13.09.1868-உலகின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான டோக்கியோ நகர் யப்பானின் தலைநகராக்கப்பட்டது.
15.09.1815-இங்கிலாந்து நாட்டவரான கெம்ரே டேவிட் என்பவர் டேவி விளக்கு (Davy Lamp) என்னும் பாதுகாப்பு விளக்கைக் கண்டுபிடித்தார்.
16.091789-நீராவியில் இயங்கும் நெசவு இயந்திரம் இங்கிலாந்தில் முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்டது.
20.09.1911-முதன்முதலாக விமானத்தைப் போருக்குப் பயன்படுத்திய நாடு இத்தாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகவிவகாரம்...

22.09.1867-அமெரிக்கரான ஷொல்டன் கில்டஸ் என்பவர் முதன் முதல் தட்டச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

29.09.1912-ஜேர்மனியரான அல்பிரட் வெஜ்னியா என்பவர் முதன் முதல் கண்டங்களின் நகர்வுகள் பற்றிக் கண்டறிந்தார்.

01.10. சர்வதேச சிறுவர் தினம்

03.10. சர்வதேச மது ஒழிப்பு தினம்.

05.10.1925-ஜேர்மனியரான விஷர் எல்பாவ் என்பவர் முதன் முதல் காபனீரொட்சைட் வாயுவைக் கண்டறிந்தார்.

06.101493-வீடுகளுக்கு இலக்கமிடும் முறை பிரான்ஸ்- பாரிசில் ஆரம்பிக்கப்பட்டது.

07.10.1823-சுவீடன் நாட்டவரான பேர்சிலியஸ் என்பவர் முதன் முதல் சிலிக்கன் கனிவளத்தைக் கண்டுபிடித்தார்.

08.10.1913-அமெரிக்கரான மக்கோலும் டெவிஸ் என்பவர் முதன் முதல் விற்றமின் "ஏ" யைக் கண்டுபிடித்தார்.

10.10 உலக உள சுகாதார தினம்.

13.10.1889-பிரான்ஸ் நாட்டவரான அலெக்ஸாண்டர் குஸ்டெவ் என்பவர் உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபிரத்தைக் கட்ட வழிவகுத்தார்.

15.10.1582-பாப்பரசர் கிரகோரியின் கலண்டர் முறை உலகிற்கு அறிமுகமானது.

16.10. உலக உணவு தினம்.

17.10.1789-பிரஞ்சுப் புரட்சி முடிவுக்கு வந்த நாள். பிரான்சை அரசாண்ட XVI லூயி மன்னன் தூக்கிலிடப்பட்ட நாள்.

18.10.1930-அமெரிக்காவைச் சேர்ந்த டூ பொன் நிறுவனம் நைலோன் என்னும் செயற்கை நூலினை கண்டுபிடித்தது.

19.10.1895-பிரான்ஸ்-பாரிசில் முதலாவது திரைப்படம் பொதுமக்களுக்குக் காட்டப்பட்டது.

20.10.1928-அமெரிக்காவின் காட்டூன் ஓவியரான வால்ட் டிஸ்னி மிக்கி எலியின் படத்தை முதன் முதலில் வரைந்தார்.

24.10.1945-ஐக்கிய நாடுகள் சபை தோற்றம் பெற்றது.

28.10.1854-ஜேர்மனியரான ஒட்டிஸ் என்பவரால் முதன் முதல் உயர்த்தி (லிப்ட்) கண்டுபிடிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் தமிழ்ப்பாடசாலை - டோட்முண்ட் திருக்குறள் மனனப் போட்டி - 2017

திருக்குறள், மனித வாழ்விற்கு வழிகாட்டும் உலகப் பொதுமறை. தமிழர் வாழ்வின் இலக்கணம் திருக்குறள் . பெரும் சிறப்புவாய்ந்த திருக்குறளை, நம்பிள்ளைகள் அறிந்தும், படித்தும் பயனடைய வழிகாட்டும் நோக்கில் நடாத்தப்படும் போட்டியே, திருக்குறள் மனனப் போட்டியாகும் . இப் போட்டியில் பிள்ளைகளைப் பங்குகொள்ளச் செய்து, திருக்குறள் வழி வாழ வைப்பதற்கும், தமிழ்க் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் பெற்றோர்களும், பெரியோர்களும் ஒத்துழைக்க வேண்டுகின்றோம்

ஒவ்வொரு பிரிவில் பங்குபற்றும் பிள்ளைகளில் கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு, முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரிய வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும். பங்குபற்றிய யாவருக்கும் பதக்கங்கள் வழங்கப்படும். போட்டிகள் 2017.11.11ந் திகதி டோட்முண்ட் நகரத்தில் நடைபெறும். இடம், நேரம் பின்பு அறியத்தரப்படும். முடிவுகள் யாவும் அத்தினமே அறிவிக்கப்பட்டு பரிசுகளும், பதக்கங்களும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி போட்டிக்கான அனுமதிக்கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (ஒருவருக்கான கட்டணம் 10,- ஒயிரோ. குடும்பத்தில் ஒரு பிள்ளைக்குக் கூடுதலானவர்கள் பங்குபற்றும்போது, முதலாவது விண்ணப்பத்தாரர் தவிர்ந்த மற்றவர்களுக்கு முறையே 5.- ஒயிரோ) விண்ணப்பம் அனுப்பும்போதே பணம் அனுப்புதல் வேண்டும்.

போட்டிக்கான விபரங்களையும், விதிமுறைகளையும் நன்கு கவனித்துக் கொள்க. பிரிவுகளுக்கான வயதுக்கணிப்பை, போட்டியின்போது உறுதிப்படுத்த வேண்டும். அந்தந்த வயதுப் பிரிவுகளுக்குரிய குறட்பாக்களையே மனனம் செய்தல் வேண்டும் . விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி 2017.09.30ந் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும் .

அனுப்ப வேண்டிய முகவரி:

Valluvar Tamilische Schule Postfach 1646, 59159 Kamen.

பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:

Ponnthurai Srijeevaghan Bank:- Ing-Diba AG, Frankfurt am Main Konto Nr:- 5405356143 Bankleitzahl:- 50010517



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வள்ளுவர் தமிழ்ப்பாடசாலை - டோட்முண்ட் திருக்குறள் மனனப்போட்டி - 2017 ------------ விபரங்கள் : வயது விடயம் - திருக்குறள்**

பாலர் பிரிவு 31.10.2012 - 30.10.2014 திகதிக்குள் பிறந்தவர்கள் 4 வயது தொடக்கம் 5 வயது வரை இரண்டாம் (2) அதிகாரமான வான்சிறப்பு என்ற அதிகாரத்திலிருந்து முதல் ஐந்து குறட்பாக்களை மனனம் செய்து கூறுதல்.

குறளிலக்கம்:- 11 - 12 - 13 - 14

கீழ்ப்பிரிவு 31.10.2010 - 30.10.2012 திகதிக்குள் பிறந்தவர்கள் 6 வயது - 7 வயது வரை பத்தாம் (10) அதிகாரமான இனியவை கூறல் என்ற அதிகாரத்திலிருந்து முதல் ஐந்து குறட் பாக்களை மனனம் செய்து கூறுதல். குறளிலக்கம்:- 91 - 92 - 93 - 94 - 95

கீழ்ப்பிரிவு கடைநிலை 31.10.2008 - 30.10.2010 திகதிக்குள் பிறந்தவர்கள் 8வயது- 9வயது வரை

இருபத்திமூன்றாம் (23) அதிகாரமான ஈகை என்ற அதிகாரத்தின் ஏழு குறட்பாக்களையும் மனனம் செய்து கூறுதல்.

குறளிலக்கம்:- 221 - 222 - 223 - 224 - 225 - 226 - 227

மத்தியபிரிவு 31.10.2006 - 30.10.2008 திகதிக்குள் பிறந்தவர்கள்10 வயது-11வயது வரை முப்பத்தோராம் (31) அதிகாரமான வெகுளாமை என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களையும் மனனம் செய்து கூறுதல்.

குறளிலக்கம்:- 301 - 302 - 303 - 304 - 305 - 306 - 307 - 308 - 309 - 310

மத்தியபிரிவு கடைநிலை 31.10.2004 - 30.10.2006 திகதிக்குள் பிறந்தவர்கள் 12 வயது - 13 வயது வரை

நாற்பதாம் (40) அதிகாரமான கல்வி என்ற அதிகாரத்திலிருந்து ஏழு குறட்பாக்களை மனனம் செய்து பொருளுடன் கூறுதல்.

குறளிலக்கம்:- 391 - 392 - 393 - 394 - 395 - 396 - 397.

மேற்பிரிவு 31.10.2002 - 30.10.2004 திகதிக்குள் பிறந்தவர்கள் 14வயது - 15வயது வரை நாற்பத்திமூன்றாம் (43) அதிகாரமான அறிவுடைமை என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களையும் மனனம் செய்து பொருளுடன் கூறுதல்.

குறளிலக்கம்:- 421 - 422 - 423 - 424 - 425 - 426 - 427 428 - 429 - 430.

மேற் பிரிவு கடைநிலை 31.10.2000 - 30.10.2002 திகதிக்குள பிறந்தவர்கள் 16 வயது - 17 வயது வரை

எழுபத்தொன்பதாம் (79) அதிகாரமான நட்பு என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களையும் மனனம் செய்து பொருளுடன் கூறுதல்.

குறளிலக்கம்:- 781 - 782 - 783 - 784 - 785 - 786 - 787 788 - 789 - 790.

அதிமேற்பிரிவு 31.10.1994 - 30.10.1999 திகதிக்குள் பிறந்தவர்கள் 18 வயது 23 வயது வரை தொண்ணூற்றொன்பதாம (99) அதிகாரமான சான்றான்மை என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களை மனனம் செய்து பொருளுடன் கூறுவதுடன், நூறாவது (100) அதிகாரமான பண்புடைமை என்ற அதிகாரத்திலிருந்து முதல் ஐந்து குறட்பாக்களை மனனம் செய்து கூறுதல். குறளிலக்கம்:- 981 - 982 - 983 - 984 - 985 - 986 - 987 - 988 - 989 - 990. ( பொருளுடன் கூறுதல்)

991 - 992 - 993 - 994 - 995. ( குறள் மட்டும் கூறுதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை நடத்தும்

## 28வது ஆண்டு பரிசளிப்பு விழா

## சுவாமி விபுலாநந்தர் அரங்கு

**இடம்:** Helmholtz Gymnasium
Münsterstraße 122 44145 Dortmund
**காலம்: 07.10.2017 சனிக்கிழமை மாலை 14.00 (2.00) மணி**

**தலைவர்:**
திரு.பொ.சிறீஜீவகன்
தலைவர் ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
- பிரதம விருந்தினர்:
பேராசிரியர் ச.சச்சிதானந்தம் பாரிசு பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம், ஐரோப்பா - இலங்கை தொலைதூரக் கல்வி இயக்குநர்
- நிகழ்ச்சிகள்
- மங்கள விளக்கேற்றல்
- மௌன அஞ்சலி
- கல்விச் சேவைக் கீதம்
- தமிழ்வாழ்த்து
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- தமிழ் இசை (கலைவகுப்பு ஆசிரியர்கள்)
திருமதி. ஞானாம்பாள் விஜயகுமார் திருமதி.வக்சலா கனகசுந்தரம் திருமதி.விஜயகலா கிருபாகரன் திருமதி. மீரா நித்தியானந்தன்
வயலின்: திரு.க.சுபாஸ்கரன் மிருதங்கம்: செல்வன்.த.டிலக்ஷன் - மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்
(பல்வேறு பாடசாலைகள்)
- தமிழ்த் தேர்வின் படிமங்கள்
- வாழ்த்துரைகள்
- பரிசளிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதாவே.......

ஒரு கணப்பொழுதெனினும்
பயம் பற்றிய சிந்தனை
வந்து போகவே செய்யும்.
அர்ச்சகரை முறைத்துப் பார்க்கையில்,
முகச் சவரம் செய்கையில்
அந்தக் கத்திக்கு...
தொடரூந்து பயணத்தில்
யாரோ ஒருத்தி
சிலிர்த்துவிட்டுப் போகையில்...
நடு வீதியில் மகிழூர்தி
முரண்டுபிடிக்கையில்...
கதவு திறந்து
காலணியைக் கழற்றுகையில்
அடுக்களையில்
கோபத்தில்
பாத்திரத்தை உருட்டும்
மனைவியிடம்...
இன்னும் ..இன்னும்
பயம் சொல்லி வருவதில்லை..
பிதாவே!
உனது பயமும் நாம் அறிவோம்..
மன்னித்தருள்கிறோம்..
மறுபிறப்பில்
என்னைப்போலவே பிறப்பீராக...

முல்லைஅமுதன்
லண்டன்

# கவிதைகள்...........

வள்ளுவர்
வந்து அறம் பற்றி
போதித்துப்போனார்.
பாரதி வந்து விருந்துண்டபடியே
வீரம் பற்றிச் சொன்னார்.
பிறகு
தாகூருடன்,
கண்ணதாசனும்
கைகுலுக்கியபடி
நடந்தனர்.
மாலையில்
கடற்கரைப்பொழுதுகளில்
குந்தியிருந்த கவிதைகளும்
வகுப்புகள் எடுத்தன.
இரவில் வந்து போன
வண்ணத்துப் பூச்சிகளும்
இசை பற்றியும்,
இசையுடன் கூடிய
வரிகள் பற்றியும்
சொல்ல கூட இருந்த
குயில்களும் ஆமோதித்தன.
எனி என்ன செய்ய..?
தலை
வேறாக தொங்கிக்கொண்டிருக்க
மூளையை
கவிதைகள்
கீறிக்கொண்டிருந்தன....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது முதுமை.......

அன்று வந்ததும் இதே நிலா
இன்று காண்பதும் அதே நிலா
வாழும் இடம்தான் வேறு நிலம்
வாழும் வாழ்க்கையும் வேறு விதம்

பட்டு மெத்தை தானிருந்தும்
படுத்தும் உறக்கம் வருவதில்லை
பல வித உணவு சமைத்திருந்தும்
பசியாற முடியவில்லை

பட்டாடை குவிந்திருந்தும்
போட்டு மகிழ யாரும் இல்லை
பொன்னாரம் இருந்தாலும்
அணிந்து கொள்ள மனதில்லை

கடந்த வாழ்வு தந்த சுகம்
காணும் வாழ்க்கையில் ஏதும் இல்லை
சின்ன பருவம் என்றாலும் அன்று
சிறுசிறு இன்பம்கண்டுகளித்திருப்போம்

திண்ணையில் அமர்ந்து
வாசித்த நூல்கள்
இன்றும்சிந்தையை
விட்டு அகலவில்லை
மாலை நேரம் காற்றில் கலந்து வரும்
மல்லிகை வாசம் என் மூக்கை
விட்டுச் செல்லவில்லை

நீல வானமும் தண்ணிலவும்
கண்ணைச் சிமிட்டும் நட்சத்திரங்களும்
இன்னும் என்னை நினைக்க வைக்கும்
தோட்டத்தில் பறக்கும்
வண்ணப் பறவைகள்
வாசலை தினமும் பார்க்க வைக்கும்

கையில் பறித்த மல்லிகை வாசம்
இன்றும் என் கைகளை
மணக்க வைக்கும்
காகித ஓடம் விட்ட வெள்ளம்
இன்றும் மனதில் கரை புரளும்


அன்னை சமைத்த
சமையலின் சுவையோ
நாவை இன்னும் ஊற வைக்கும்
கண்ணைச் சிமிட்டி சுவைக்க வைத்த
புளியம் பழமும் நினைவிருக்கும்

இனிய காலம் கடந்து போக
இளமை வாழ்வும் தொலைந்து போக
பகலும் போக இருளும்
சூழ்தல் போலவே
இளமை அழிந்து
முதுமை கூடும் காலமே
இது முதுமை கூடும் காலமே!

கவி மீனா – ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மண் -184 அட்டைப்படத்துக்கானகவிதை

மலர்வினில் மணமும் மலர்களின் வகையிலா நிறமும்
மண்ணின் மகத்துவமென்று மானிடமே வியந்துநிற்கும்
புலர்வினில் புள்ளினம் பூபாளம் இசைத்திடும் பொழுதும்
புவியினில் பனித்துளிபு ல்நுனிகளில் வைரமாய் மயக்கும்.!

உலர்வில்லா உள்ளங்களில் உந்திடும் பல் திறமைகளும்
உலகினில் பவனிவருகையில் உள் உருகியே உவக்கும்
அலர்ந்திடும் சிறப்புகளும்ஆற்றுகின்ற நற்சேவைகளும்
அவனியில் தனியிடத்தினை அவரவர்க்கெனவே ஒதுக்கும்.!

தளர்விலா எண்ணங்கள் வருந்தடைகளைத்தகர்த்திடும்
தார்மீக உலகினிலேயே தடங்களை ஊன்றிப் பதித்திடும்
பலர்மகிழ்ந்திடப் பகிர்தலில் பண்பட்டநேசம் வெளிப்படும்
பண்பாட்டு விழுமியங்கள்இப்பாரே வியந்திடப் பண்பாடும்.!

சுழர்கின்ற இராட்டிடனமாய் சுழன்றிடும் இவ்வுலகவலமும்
சுருங்கிடும் வாழ்வின் தேடலை சுற்றத்திற்காய்ச் சொரியும்
பலர்மன இருக்கைகளில் பாசமாகவே அமர்ந்திடுதற்கும்
பண்பட்ட பணிகளெலாம் பரிசுத்தமாய் படிகட்டுகளாகும்.!

அம்பலவன்புவனேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் வித்தகர்



ஏர் உழத நெல்வயல்களில் எழகதிர் வந்தே பண்ணிசைக்கும்
ஏற்றம்தரும் கண்ணகியம்மன் எழுந்தருளி அருள்பாலிக்கின்ற
கார்மேகம் குடைபிடிக்கும் மிகக்களிப்பான காரைதீவுப்பதியில்
காவியநாயகனாய் அவதரித்துக் கடல் கடந்து கல்விபயின்று
ஊர்மெச்சும் உத்தமனாய் உலாவந்த உயர் மயில்வாகனனாரை
உலகம்வாழும் காலம்வரை உள்ளத்தில் ஏற்றித்துதிமனமே!

கூர்விழியாய் குவலயத்தின் குறைகள் தீர்க்கும் செல்வமென
குற்றமில்லாக் கல்வியறிவூட்டியே குன்றென உயர்ந்துநின்று
தார்ஒழுகும் நீர்கொழும்பில் தமிழாசிரியராய்ப் பணியாற்றித்
தமிழுக்கும் சைவத்துக்கும் தனையீந்த பெருந்தகையாய்ப்
பேர்பெற்ற கேம்ப்றிஜ்ஜில் பெருமை தருகின்ற பட்டம்பெற்று
பிறந்த மண்ணுக்கு பெருமைசேர்த்த பெருமகனை போற்றுமனமே.!

நேர்கொண்டபார்வையுடன் நெறிமுறைகளில் நேர்த்தியுமாய்
நிழலான இராமகிருஷ்னரின் வழியே நிரந்தரமாய்த் துறவியாகி
வேர்கொண்ட விருச்சமாகத் தமிழ்வித்துவத்தை விதைத்துவிட
விபுலானந்த அடிகளாராய் வெளிவந்து வியாபித்து நிழல் தந்தார்
நீர்சூழ்ந்த நிலவளமும் நிறைந்த தேன்மணம் கமழும் கல்லடியில்
நிமிர்ந்த சிவானந்த வித்தியாலயத்தை நிறுவயவரை ஏற்றுமனமே.!

தேர்ஓடும் தமிழகத்துத் திருவண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்
தெள்ளுதமிழ்ப் பேராசிரியராகித் தென்னிந்திய இசையையுமாய்ந்து
பார்போற்றும் பல்கலைக்கழகங்களில் பன்மொழிப் பட்டங்களுடன்
பகலவனாய்ப் பல்திசையும் பரவியமுதல் தமிழ் பண்டிதராகியவர்
நார்தொடுத்த நறுமலர்சரமாய் நமக்கென யாழ்நூலை அருளிய
நசையுறு முத்தமிழ் வித்தகரை நாளெல்லாம் பணிந்திடுமனமே..!

அம்பலவன்புவனேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பமின்றி வெற்றியில்லை.......

திருமதி ஜெயா நடேசன்
யேர்மனி

ஒரு தாயானவள் கருவுற்ற தனது குழந்தையைப் பெற்றெடுக்க மட்டும் வலி,வேதனை எனப் பல்வேறு தியாகங்களைச் செய்யவேண்டியவளாகின்றாள். தனது உணவை, நித்திரையை, பொழுது போக்கு, தன் நேரத்தை ஏன் தன் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறாள் எனச்சொல்லிக் கொண்டே போகலாம். இப்படிப் பல்வேறு வேதனைகளையும் அனுபவித்தே அவள் குழந்தை ஒன்றைப் பெற்றெடுக்கிறாள். அக்குழந்தையே குடும்ப வாழ்விற்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. குழந்தையின் ஒவ்வொரு பருவ வளர்ச்சிக்கும் தாயவள் தனது வாழ்வை அர்ப்பணித்துச் சந்தோசப்படுகின்றாள்.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெறுவதற்காக ஒரு விளையாட்டு வீரன் எப்படித் தனது உடலை வருத்திப் பயிற்சி எடுத்து நேரத்தையே செலவழிக்கின்றான். தனது ஆசைகளை அடக்கி வெற்றியையே குறிக்கோளாகக்கொண்டு பாடுபடுகிறான். அவன் மேடை ஏறிப் பரிசு பெறும் போது அவனது பெற்றோர் எவ்வளவு ஆனந்தமடைகின்றனர். மக்கள் மத்தியில் அவன் பெறும் புகழ் வாழ்த்துக்கு அளவே இல்லை.

ஒவ்வொரு குடும்பங்களின் வாழ்க்கைப் பயணத்தில் எவ்வளவோ துன்பங்களை அனுபவிக்கிறார்கள். இதனைச் கடவுள் ஏதும் நன்மைக்காகவே செய்கிறார் என்றும் சிலர் எடுத்துக்கொள்வார்கள். சில துன்பங்கள் வந்துவிட்டால் கடவுளுக்குக் கண்ணில்லையா?..எமக்குத்தான் இப்படித் தொடர்ந்து நடைபெறுகிறதே?...ஏன் இப்படித் தொடர்ந்து சோதிக்கிறார் என்று பலர் கூறிக்கொள்வார்கள்.

பலர் வெற்றியடையத்தான் விரும்புகிறார்கள். ஆனால் அவ் வெற்றியைப் பெற்றுக்கொள்ள தம்மை ஈடுபடுத்த அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ள நேரத்தை, சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதில்லை. மனித வாழ்வில் துன்பம் என்பது இரண்டறக்கலந்த ஒன்றுதான். எனவே துன்பத்தைக் கண்டு துவண்டுவிட வேண்டிய அவசியமில்லை. அவற்றை நல்ல முறையியே எதிர்கொண்டு, அவைகளுக்குள் இருக்கின்ற பிரச்சனைகளை ஆழமாக ஆராய்ச்சி செய்து புரிந்துகொண்டு இலட்சியப் பாதையில் வெற்றியை அடைய முன் வருகையில் சவால்களை எதிர்கொள்ள முடியும். இதனால் வரும் துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு எமது அர்ப்பணிப்பின் மூலம் செயற்படுவோம்!... வெற்றிபெறுவோம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளான் சாப்பிடுங்கள்........வியக்கும் அற்புதத்தை பெறலாம்............

காளானில் இரும்புச்சத்து, ஜிங்க், காப்பர், விட்டமின் K ,C, D, B, மினரல் சத்துக்கள், ஆன்டி-ஆக்ஸிடென்டுகள், பொட்டாசியம், சோடியம் போன்ற எண்ணற்ற சத்துக்கள் நிறைந்துள்ளது. 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காளான் வகைகள் உள்ளது. ஆனால், அவை அனைத்துமே உண்ணக்கூடியது அல்ல. ஏனெனில் அதில் பலவகை காளான்கள் விஷத்தன்மையும் கொண்டவை.

### காளான் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்?

காளானில் குறைந்த அளவு சோடியம் மற்றும் அதிகளவு பொட்டாசியம் சத்துக்கள் உள்ளதால் ரத்த அழுத்தம் மற்றும் ரத்தத்தில் உள்ள கொழுப்பை கட்டுப்படுத்தி, இதயத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. காளானில் உள்ள Beta - Glucan எனும் பாலிசாக்கரைடு, பல வகை நோய்களைத் தடுத்து ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. காளானில் உள்ள Lentysine Eeritadenin எனும் வேதிப்பொருட்கள், ரத்தத்தில் கலந்துள்ள கெட்ட கொழுப்பைக் குறைத்து, ரத்தத்தை சுத்தமாக்கி, இதயத்தின் செயல்பாட்டை சீராக்குகிறது. காளானில் ஆன்டி-ஆக்ஸிடென்டுகள் அதிகம் உள்ளதால், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து, புற்றுநோய் வராமல் தடுக்க உதவுகிறது. காளான் சாப்பிடுவதால், ஆஸ்துமா போன்ற சுவாசக் கோளாறு குறைபாடுகளை தடுப்பதுடன், உடலில் ஏற்படும் காயங்களை எளிதில் குணமாக்க உதவுகிறது. நார்ச்சத்து காளானில் அதிகமாக உள்ளது. எனவே காளானை தினமும் உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால், அது சர்க்கரை நோயைக் கட்டுக்குள் வைக்க உதவுகிறது. காளானை முட்டைகோஸ், பச்சைப் பட்டாணி ஆகியவை சேர்த்து சூப் வைத்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல், வயிற்றுப்புண், ஆசனவாய்ப்புண் போன்ற பிரச்சனைகளை குணமாக்கும்.

### யாரெல்லாம் சாப்பிடக் கூடாது?

கீல்வாதம் பிரச்சனை உள்ளவர்கள் காளானை உணவில் சேர்த்து சாப்பிடக் கூடாது. காளான் உணவுகளை நன்றாக வேகவைத்து சாப்பிட வேண்டும். பச்சையாக சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். காளான் தாய்ப்பாலை வற்ற வைக்கும் தன்மை கொண்டதால், பாலூட்டும் தாய்மார்கள் காளான் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேனுடன் எதனை கலந்து குடிக்கலாம்?...

இதயநோய்களுக்கு சிறந்த உணவான தேனை அன்றாடம் எடுத்துக்கொள்வதன் மூலம் பல்வேறு ஆரோக்கிய நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம்.100 கிராம் தேனில் உள்ள சத்துக்கள்..கொழுப்பு - 0 %, சோடியம் 4 மி.கி, பொட்டாசியம் 52 மி.கி, பைபர் 0.2 கி, சர்க்கரை 82 கி, கார்போஹைட்ரேட் 82 கி, விட்டமின் ஏ, கால்சியம், விட்டமின் டி, விட்டமின் டீ12, விட்டமின் டீ-6 போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளன.

**மருத்துவ பயன்கள்**

பித்த நீர்ச் சுரப்பு இல்லாதவர்கள் தொடர்ந்து தேன் அருந்தி வந்தால், பித்த நீர் சுரந்து தொண்டை இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் சுலபமாக நீங்கி விடுகின்றன.குழந்தைகளுக்கு உண்டாகும் பல்நோய், இருதய நோய் ஆகியவற்றுக்குத் தேன் ஒரு சிறந்த சஞ்சீவியாகும். தேன் மூலம் சுவாசக் கோளாறு, வயிற்றுக் கடுப்பு, கிருமி நோய், தாகம், வாந்தி பேதி, தீப்புண், விக்கல், மலச்சிக்கல் ஆகிய நோய்கள் குணமாகும், பசியை அது வளர்க்கும். ஜீரணத்துக்கும் உதவும்.தேன் கொழுப்பைக் கரைக்கக் கூடியது. ஆகவே உடல் மிகவும் பருமனாக உள்ளவர்கள் தொடர்ந்து தேன் சாப்பிட்டு வந்தால் பருமனும் எடையும் குறையும். ரத்தப் பித்தத்துக்கு அதாவது வாய், மூக்கு முதலியவற்றிலிருந்து ரத்தம் வடியும் வியாதிக்கு, ஆட்டின் பாலில் தேனைக் கலந்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். நமது உடலின் மேல் ஏற்படும் புண் காயங்களுக்கு மாத்திரமன்றி, உள்ளே ஏற்படும் இரைப்பைப் புண் போன்றவற்றையும் தேன் சாப்பிட்டு குணமாக்கலாம்.

**தேனுடன் எதனை கலந்து குடிக்கலாம்?**

தேனுடன் வெங்காயச்சாறு கலந்து சாப்பிட்டால் கண்பார்வை பிரகாசம் அடையும்.தேனும், முட்டையும், பாலும் கலந்து சாப்பிட்டுவந்தால் ஆஸ்துமா உபாதையிலிருந்து குணமாகலாம். இருமல், சளித் தொல்லை நுரையீரல் தொடர்பான நோய் எது இருந்தாலும் பார்லிக் கஞ்சியை வடிகட்டி அதில் தேன் கலந்து சாப்பிட, இருமல் மட்டுப்படும். சளித் தொல்லை குறையும். தேனையும் மாதுளம் பழ ரசத்தையும் சம அளவு சேர்த்துத் தினமும் சாப்பிட்டால் இருதய நோய்கள் தீரும். உடம்பில் இரத்தக் குறைவு அல்லது சோகை நோய் இருந்தால் தேனும், பாலும் சாப்பிட்டு வந்தால் சோகை நோய் நீங்கும். தேனுடன் சுண்ணாம்பைக் கலந்து, நன்றாகக் குழைத்து பழக்காத கட்டிகள் மேல் பூச கட்டிகள் பழுக்கும். மீன் எண்ணெயோடு தேனைக் கலந்து உண்டு வந்தால், ஆறாத புண்கள் ஆறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வைத்தியம்.......

கவி மீரா - யேர்மனி

இப்பகுதியில் இன்று ஸ்பாகிள் ( Asparugus ) என இங்கு அழைக்கபடும் தண்ணீர் விட்டான் கிழங்கு பற்றி அறிவோம்

தண்ணீர் விட்டான் கிழங்கு -

இது என்ன என்று நானே இந்த தமிழ் பேரை கூகிள் பண்ணிதான் கண்டு பிடித்தேன் இதன் ஆங்கில பேரு ( Asparagus ) இதன் டொச் பேரு ( Spargel) இது தற்சமயம் இங்கு மிகவும் அமோக மாக விற்பனையில் உள்ள ஒரு மரக்கறி, இதை ஜேர்மன் நாட்டு மக்கள் பெரிதும் விரும்பி சாப்பிடுவார்கள். இத்தாவரம் ஆசியா அபிரிக்கா இந்தியா மேலும் வெப்பமான காலங்களில் ஐரோப்பாவிலும் வளர்கிறது.

அதிக விலையில் விற்கப்படும் ஒரு மரக்கறி இனத்தை சேர்ந்த இந்த கிழங்கின் முளை அனேக மருத்துவ தன்மை உடையதாக சொல்லப் படுகிறது. முக்கியமாக மலட்டு தன்மையை போக்குகிறதாம், சிறுநீர் பாதையில் உள்ள நோய்களை குணப்படுத்தவும், மலமிளக்கியாக இது பெரிதும் உதவி மலசிக்கல் உள்ளவர்களுக்கு மருந்தாகிறது, இது நரம்புகளில் உள்ள வலியை போக்கவும் உதவுகிறது என்று நாட்டு வைத்தியத்தில் சொல்ல படுகிறது.

இது இரண்டு நிறங்களில் இங்கு கிடைக்கும், வெள்ளை நிறமுடைய கிழங்கு விலை அதிகம், பச்சை நிற கிழங்கு சுவை அதிகம். இதை சமைக்கும் போது முருங்கைகாய்க்கு தோலை சீவுவது போல் மிக கவனமாக கிழங்கு உடையாமல் இதன் மேல் தோலை நீக்க வேணும் அதில் ஜேர்மன் மக்கள் மிகக் கவனமெடுப்பார்கள் சமைக்கும் போது. இந்த முளைக் கிழங்கை வைத்து பலவிதமாகச் சமைக்க முடியும், எப்படி சமைத்தாலும் இது சுவையோடு மருத்துவ தன்மையும் கொண்ட மரக்கறி ஆகிறது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசைன் போல்ட் - 22 தங்கப்பதக்கங்களுக்குச் சொந்தக்காரன்...தடுக்கி விழுந்து சரித்திரத்தை முடித்துக் கொண்டான்.....




யானைக்கும் அடி சறுக்கும் ! உசைன் போல்ட்டுக்கு நடந்தது என்ன? தங்கமில்லாது முடிந்தது அத்தியாயம் உலகின் சிறந்த தடகள வீரரான ஜமைக்காவின் அதிவேக மனிதன் உசைன் போல்ட் தனது இறுதி சர்வதேச போட்டியில் ஓடிக்கொண்டிருந்த போது திடீரென கீழே வீழ்ந்ததால் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இலண்டனில் இடம்பெற்ற சர்வதேச தடகள சம்பியன்ஷிப் போட்டியில் உசைன் போல்ட்டுக்கான இறுதிப் போட்டி இடம்பெற்றது. இதன்போது, தனது இறுதி 4X100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இறுதியில் உசைன் போல்ட் ஓடிக் கொண்டிருந்த போது திடீர் என கீழே வீழ்ந்துள்ளார். இதன் காரணமாக தனது இறுதிப் போட்டியிலும் தடகள வாழ்வின் இறுதி சர்வதேசப் போட்டியிலும் தங்கம் வெல்ல விரும்பிய உசைன் போல்ட்டின் கனவு இறுதியில் நிறைவேறாமல் போயுள்ளது.

ஆடிய ஆட்டமென்ன... ஓடிய ஓட்டமென்ன..பரிசு பெற்ற பணம் என்ன... பாராட்டு மழையில் நனைந்து உலக விளையாட்டு ரசிகர்களை மகிழ்வித்த காலமென்ன.. உலகத்திலேயே முதல்தர ஓட்டக்காரனாகக் கடந்த பத்துவருடங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாகச் சாதனையை தன்வசம் வைத்துக்கொண்ட உசைன் போல்ட் 12.08.2017 அன்று லண்டனில் நடைபெற்ற உலக தடகள ஓட்டப் போட்டியில் தடுக்கி விழுந்து தனது சாதனையைப் பறிகொடுத்திருப்பது உலக விளையாட்டு ரசிகர்களுக்குக் கவலைக்கு மேல் கவலையாகவே முடிவடைந்துவிட்டது. கடைசி போட்டியில் இப்படியா? ஓடமுடியாமல் டிராக்கிலே விழுந்த உசேன் போல்ட். லண்டனில் உலக சாம்பியன்ஷிப் தடகள போட்டிகள் நடந்தது. இப்போட்டியில் ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த மின்னல் வீரர் என்றழைக்கப்படும் உசேன் போல்ட் 4X100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்டார். இப்போட்டிதான் உசேன் போல்ட்டின் கடைசிப் போட்டி என்று தெரிவிக்கப்பட்டிருந்தது, உசேன் போல்ட்டின் கடைசி போட்டி என்பதால் அரங்கு முழுவதும் ரசிகர்கள் கூடியிருந்தனர்.

இந்நிலையில் போட்டியின் போது 4-வது வீரராக ஆக ஓடிய உசேன் போல்ட் தனது பாணியில் கடைசி நேரத்தில் வேகமெடுத்து தனக்கு முன் ஓடுபவர் முந்தும் முயற்சியின் போது எதிர்பாராத விதமாக அவரது இடது தொடையில் பலத்த காயம் ஏற்பட்டது இதனால் அவர் வலி தாங்காமல் ஓட முடியாமல் டிராக்கிலேயே விழுந்தார். இதை கண்டதும் அரங்கமே அதிர்ச்சியில் உறைந்தது. இதையடுத்து அவருக்கு வீல் சேர் கொண்டு வரப்பட்டது. எனினும் அவர் கால் வலியுடன் நடந்தே சென்றார். உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்த போட்டியில் உசேன் போல்ட் காயமடைந்தது ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

-உலகின் முதல்தர ஓட்ட வீரரான இவரின் சாதனையை யாரும் முறியடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும். இவரின் சாதனைகள்..

100 மீ ஓட்டம் 9.58 செக்கன் -16.8.2009 - பேர்ளின்
200 மீ ஓட்டம் 19.19 செக்கன் - 20.08.2009 - பேர்ளின்
4X100 மீ ஓட்டம் 36.84 செக்கன் - 11.08.2012 - லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெற்ற தங்கப் பதக்கங்கள்

| | | 100மீ | 200மீ | 4X100மீ | |
|---|---|---|---|---|---|
| -Olympics | 2008- சீனா | 1 | 1 | 0 | |
| | 2012- லண்டன் | 1 | 1 | 1 | |
| | 2016- பிறேசில் | 1 | 1 | 1 | |
| | | 3 + | 3 + | 2 | = 8 |
| -WorldChampionships | | | | | |
| | 2009-யேர்மனி | 1 | 1 | 1 | |
| | 2011-தென்கொரியா | 0 | 1 | 1 | |
| | 2013-ரசியா | 1 | 1 | 1 | |
| | 2015-சீனா | 1 | 1 | 1 | |
| | | 3 + | 4 + | 4 | = 11 |
| -Joniore World Championships (2002, 2003) | | | | | = 2 |
| -Commonwealth Games (2014) | | | | | = 1 |
| | | | | மொத்தம் | = 22 |

## விருதுகளும் கௌரவங்களும்

- ஆண்டிற்கான ஐ.ஏ.ஏ.எஃ.பின் சிறந்த உலக விளையாட்டு வீரர் விருது: 2008, 2009, 2011, 2012, 2013
- ஆண்டிற்கான சிறந்த தடகள விளையாட்டு வீரர் விருது: 2008, 2009
- ஆண்டிற்கான லாரியஸ் உலக விளையாட்டு வீரர் விருது : 2009, 2010, 2013
- பிபிசியின் ஆண்டிற்கான சிறந்த அயல்நாட்டு விளையாட்டுத்துறை ஆளுமை விருது: 2008, 2009, 2012
- சாம்பியன்களின் சாம்பியன் விருது: 2008, 2009, 2012
- ஜமைக்காவின் ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீரர் விருது: 2008, 2009, 2011, 2012, 2013
- மார்கா லேயென்டா (2009)
- அக்டோபர் 2008-இல் ஜமைக்காவின் உயர் குடியியல் விருதான தனிச்சிறப்பிற்கான தளபதி (Commander of the Order of Distinction) பட்டம் வழங்கப்பட்டது , இதன் மூலம் அவரது பெயரின் பின்னடையாக "CD" என்ற எழுத்துக்கள் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 4 | 6 | 9 | 1 | 8 | 5 | 7 |
| 5 | 9 | 1 | 8 | 7 | 4 | 3 | 2 | 6 |
| 8 | 7 | 6 | 5 | 3 | 2 | 4 | 1 | 9 |
| 2 | 8 | 3 | 4 | 6 | 7 | 1 | 9 | 5 |
| 1 | 4 | 9 | 2 | 8 | 5 | 7 | 6 | 3 |
| 7 | 6 | 5 | 3 | 1 | 9 | 2 | 4 | 8 |
| 6 | 5 | 7 | 1 | 4 | 3 | 9 | 8 | 2 |
| 4 | 3 | 2 | 9 | 5 | 8 | 6 | 7 | 1 |
| 9 | 1 | 8 | 7 | 2 | 6 | 5 | 3 | 4 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-92

| | | | |
|---|---|---|---|
| அ | ன் | னை | பூ |
| ன் | பு | ன் | மா |
| பு | ம் | செ | தே |
| த | பா | ல் | வி |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 153


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ன் | னை | தி | ரே | சா | த் |
| ப | பு | ப் | ரு | க | ன் | னி |
| க | வி | க் | கோ | ல் | வ | நா |
| ரி | தா | ஊ | ணை | ர | லீ | ய |
| ப் | லை | ழ | ய | ளி | ல் | க |
| பு | ல் | ள் | லை | ல் | ப | ம் |
| கு | மு | க | சா | செ | ம் | பூ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்குது இங்க!....

-மதவடி மயிலர்-



வணக்கம்!....வணக்கம்!.. நான்தான் மதவடி மயிலன்...உங்களுக்கு என்னைத் தெரியாதுதான்..ஆனால் எனக்கு உங்களைத் தெரியும். என்ன இவன் கண்டதையும் உளறுகிறான் என்று யோசியாதையுங்கோ. இந்த மயிலன் வாய் திறந்தால் ஏதோ விசயத்தோடதான் திறப்பான். கேட்கிறதும் கேட்காமல் விடுவதும் உங்கட பிரச்சனை. நான் சொல்லாமலும் விடமாட்டேன்.

சரி..சரி...எப்படி எல்லாரும் சுகமாய் இருப்பீர்கள் என்றுதான் நான் நம்புகின்றேன். வாழ்க்கையில் சுக-துக்கம்போல் இங்க மழையும்-வெய்யிலும், குளிரும்-வெப்பமும், வேலையும்-வீடும், சோறும்-தண்ணியும் என மாறி மாறி நடந்துகொண்டுதானே இருக்கும். என்ன செய்வது எல்லாவற்றையும் தாங்கியும் அனுபவித்தும்தானே இந்தப் பூமியில் வாழவேண்டும்.

சரி...சரி..இனி விசயத்துக்கு வாறன்....வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பலர் இந்தக் கோடை விடுமுறையில் ஊருக்குப்போய் நல்லா உண்டு கொழுத்தும், உறவுகளோடு கூடிக்குலாவிச் சிலர் மூக்குமுட்டத் தண்ணியடித்தும் மகிழ்ந்திருப்பீர்கள் என்று இந்த மயிலனுக்கு நல்லாத் தெரியும். ஓடி..ஓடி இரவு-பகல், பனி - குளிர் எல்லாம் அலைந்து உழைப்பவர்களுக்கு இந்த விடுமுறைகள் (யேர்மன் மொழியில் ஊர்லாப்) கட்டாயம் வேணும் தானே... இந்த வெள்ளைக்காரரைப் பாருங்கோவன் ஓடி..ஓடி உழைத்த காசை சம்பாதித்துக்கொண்டு வருடத்திலை இரண்டு-மூன்று தடவைகள் சுற்றுலா சென்று மகிழ்வார்கள். இப்படிச் சுற்றுலா செல்வதால் அவர்களுக்கு எவ்வளவு மன ஆறுதல் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புத்துணர்வு கிடைக்கின்றது. உற்சாகம் மகிழ்வு பெற்று வாழ்கையை நல்ல படியாக நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து முடிப்பார்கள். அவை மட்டுமல்ல இப்படியாகச் சுற்றுலா சென்று வருவதால் பல விடையங்களையும் கண்டு அறிந்து கற்றுக் கொள்கிறார்கள். இத்துடன் இருபது-இருபத்தைந்து வருடங்களில் முப்பது-நாற்பது நாடுகளையும் பார்த்து மகிழ்கிறார்கள்.

நம்மடை ஆட்களைப் பார்த்தால் போனால் ஊர், வந்தால் வெளிநாடுதான். போனாலும் ஊருக்குத்தான் போய் பழையபடி பிட்டும் இடியப்பமும் சோறும் கறியும் என முடிந்துவிடும். அங்கு நாலுபத்து இடங்களுக்குப் போய் சுற்றிப் பார்ப்பதுகிடையாது. அனேகமானோர் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு போவார்கள். குறுகிய வட்டத்தோடு எல்லாம் முடிந்துவிடும். இன்னும் சிலர் கோவில்கள் பலவற்றைத் தரிசித்து வருவார்கள். தானும் மனைவி பிள்ளைகளும் நூறு வருடங்கள் சுகமாக வாழவேண்டும் என்றும் உறவுகள் நூறுவருடங்கள் வாழவேண்டும் என்று வழிபடும் கடவுளர்களுக்கு லஞ்சம் கொடுத்து (பணம், பவுண், பொருள், பண்டம், சீர உதவிகள்) வழிபடுவார்கள். சுற்றத்தார், ஊர், உலகம் நல்லாயிருக்க வேண்டும் என்று யார்தான் வழிபடுவார்கள். எல்லாம் சுயநலப் போக்குகள்தானே.

வெளிநாடுகளிலிருந்து தாயகம் சென்று விடுமுறையைக் களிப் போரில் சிலரின் கூத்துக்களையும் அட்ட காசங்களையும் அங்க தாங்க முடியாது. நானும் பதினைந்து நாள் விடுமுறையில் சென்று வந்தபடியால் அந்தக்கூத்துக்களை நேரில் பார்த்ததை, காட்சிகளின் கோலங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள இந்த மதவடியான் விரும்புகின்றான். அப்பப்பா... சொல்லமுடியாத அட்டகாசம்

வெளிநாட்டுக் காசுகளை கண், மண் தெரியாமல் அள்ளி விசுக்குகினம். பொருட்களை வேண்டும் போது விலை பாராமல் கேட்கும் காசைக் கொடுத்து வேண்டுகிறார்கள். மிச்சக்காசை வேண்டுவதே கிடையாது. நம்மட வியாபாரிகளும் சும்மா இலேசுப்பட்டவர்களா!.. ஓரிரு நிமிடத்தில் இவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் எனத் துப்புத் துலக்கி, அதற்கேற்றவாறு விலைகளைக் கூட்டிச்சொல்லிப் பகற் கொள்ளை அடிப்பதில் வலு கில்லாடிகள்தான் பாருங்கோ. இதில் என்ன முக்கியமென்றால் வெளி நாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார்கள் எவ்வளவையும் கொடுத்துப் பொருட்களை வேண்டிவிட அங்குவாழும் சாதாரண வறிய குடும்பங்கள்தான் விலைவாசியால் இன்னலுறுகின்றார்கள் என்பதை இந்த வெளிநாட்டு ராசா-ராணிகள் என் சிந்திக்கத் தவறுகின்றார்கள் என்பதை யோசிக்கும் போது அவர்களின் மண்டையில இறுக்கி ஒரு குட்டுப்போட வேண்டும் போல கிடக்குது பாருங்கோ!...

அடுத்து இன்னொன்று.. வெளிநாடுகளில் சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில்தான் பாருங்கோ கோவில்களின் தேர் உருளும். மற்றைய நாட்களில் கடசிவரையும் உருளாது. எல்லாம் விசயத்தோடுதான் பாருங்கோ!.. சனி, ஞாயிறு விடுமுறை நாளென்றபடியால் பக்தர்கள் கூட்டம் அலை மோதும் பிறகென்ன அன்னதானம், (இலவசச் சாப்பாடு) பால் பழம், சர்க்கரைத்தண்ணீர், மோர், சர்பத் எனவும் நடைபெறும். கடைகளில் வியாாரம் களைகட்டும். கோவில் கும்பிட்டதோ இல்லையோ சனத்திரள் கடைகளில் நிறைந்து வழியும். காசு பணமும் கொட்டும். கடைக்காரர்களுக்கும் கோவிலுக்கும் வருமானம் பெருகும். செல்வச் செழிப்புதான் என்பதை இந்த மதவடி மயிலன் நேர கண்டுகொண்டேன். "கண்டுகொண்டேன்"இது சினிமாப் படக்கதையல்ல உண்மைக் கதைதான்பாருங்கோ!...

வெளிநாடுகளிலிருந்து தாய் நாட்டுக்குச் சென்றுவரும் நம்மட ஆட்களின்ற வேடிக்கை விநோதங்களைச் சொல்லமுடியாது பாருங்கோ.. இளம் பெண் பிள்ளைகள் ஏன் திருமணமான பெண்கள் எனப்பலர் வெளிநாட்டுப் பழக்கவழங்கங்கள் போல பேசுவதும் பழகுவதும் ஒருபுறம் கிழிஞ்சஉடை, அரைகுறைஉடை, இறுக்கமானஉடை அணிந்து வலம்வரும் காட்சிகள் கொஞ்சமில்லை பாருங்கோ. இதுதான் நவநாகரீகம் என்று தாமும் கெட்டு அங்குள்ளவர்களையும் கெடப்பண்ணிக் கலாச்சாரச் சீரழிவிற்கு வழிகாட்டும் உத்தமர்கள்தான் இந்த வெளிநாட்டுப் பெண்கள். என்றுதான் சொல்ல வேண்டும். இது உண்மை பாருங்கோ. இந்த மயிலன் சொல்வது தவறு என்றால் ஒருக்கா நீங்களும் போய்ப் பார்த்தால் விசயம் விளங்கும்.

வெளிநாடுகளில் இளம் பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர் பலர் தமது பிள்ளைகளை ஊருக்கு அழைத்துக் கொண்டுபோய் சொந்தம்,சாதி, சமயம், ஊர், பிரதேசம் எனப்பார்த்து திருமணம் முடிக்கும் (புலன்) புலம் பெயர்ந்து வாழும் பெற்றோர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவென்று சொல்வது. குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடுபவர் போல் தமது பிள்ளைகளையும் ஒரே வட்டத்திற்குள் திருமணம் செய்து கொள்கிறார்கள். இவ்விடயத்தில் பெற்றோர் குறியாகவே இருந்து செயற்படுகிறார்கள். இதன் பின் விளைவுகளைச் சிந்திக்காமல் செய்து முடிப்பதால் இறுதியில் இளம் பிள்ளைகள் விவாகரத்து, பிரிவினை என்னும் சகதிக்குள் விழுந்து வாழ்வைச் சீரழிப்பதை இந்தப் பெற்றோர் சிந்திக்கிறார்களா!... முன் பின் தெரியாத, பேசிப்பழகாத இளம் பிள்ளைகள் பலர் தாய் தந்தையரின் விருப்பத்தை நிறைவேற்ற பிள்ளைகள் பலிக்கடாவாவது எந்த வகையில் நியாயம் என இந்த மயிலன் தட்டிக் கேட்கிறான்.

வெளிநாடுகளிலிருந்து தாயகம் சென்றுவரும் சிலர் அங்குள்ள வறியவர்களுக்கு உதவிசெய்துவிட்டு மௌனமாகத் திரும்பி வருகிறார்கள். உண்மையில் இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஆனானல் பலர் உடை நடையிலும் பணம் ஆடம்பரத்திலும் பந்தாகாட்டிவிட்டு ஏழைகளுக்கு ஒரு சதம்கூடக் கொடுக்காமல் வந்து சேர்ந்து விடுவார்கள். இன்னும் பந்தாகாட்டும் பலர் அங்குள்ள தம் உறவுகளுக்கு அளவுக்கு அதிகமாகப் பணத்தை அள்ளிக் கொடுப்பதும் கார், மோட்டார் சைக்கிள் வேண்டிக் கொடுப்பதால் அங்குள்ள இளம் சந்ததிகள் அதிகமாகக் கெட்டுச் சீரழிந்து போகிறார்கள் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மிக அதிக பணப்புழக்கத்தால் குடி, புகைத்தல், போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதுடன் பாலியல், கொள்ளை, கொலைச் சம்பவங்களும் என்றும் இலாதவாறு மலிந்துவிட்டதை இந்த மயிலனும் நேரடியாகக் கண்டுகொண்டான். தட்டிக்கேட்டால் அடிதடி, கத்தி வெட்டு, வழக்கு மறியல் என்று முடிவடைகின்றது. கொலையும் விழுகின்றது. இப்படியாகப் பல அவலங்கள் நிகழ்வதற்கு புலம்பெயர் தமிழ்ச்சமூகமும் காரணமாக இருப்பது உண்மையான விடையம் பாருங்கோ!..

இந்த மயிலன் கேட்டு, பார்த்து, அறிந்த விடையங்கள் இன்னும் பல இருக்குது பாருங்கோ.. ஒவ்வொன்றாக வெளிக்கொண்டு வருவான். படியுங்கோ. ஒருவராவது இந்த விடையத்தைச் சிந்தித்தால் மயிலனுக்கு வெற்றிதான். மீண்டும் அடுத்த பகுதியில் இன்னொரு விடையத்தோடு நான் உங்களைச் சந்திப்பேன். அப்ப வரட்டே.. மீண்டும் வருவான் உங்கள் மயிலன்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் வெளிநாட்டுப் பெண்ணின் பக்தியால் வியப்படைந்த தமிழர்கள்...




ஈழத்தில் புகழ்பெற்ற ஆலயமான நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா கடந்த 2017-07- 28 ஆம் திகதி ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடைபெற்றது.

நல்லூர் ஆலயத்திற்கு வெளிநாட்டுப் பெண் ஒருவர் பாற்காவடியுடன் வருகை தந்தமை அங்கிருந்த பக்தர்களை ஆச்சரியப்பட வைத்துள்ளது. வெளிநாட்டுப் பெண் ஒருவர் இந்து மதத்தின் பெருமைகளை அறிந்து பாற்காவடி எடுத்துள்ள நிகழ்வு நல்லூர் கந்தனின் மகத்துவத்தினை உலகறியச் செய்துள்ளது.
அத்துடன் இவ் வெளிநாட்டு பெண்ணின் பக்தி, கூடியிருந்த பக்தர்களை வியக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் யாழில் தமிழ் பாரம்பரிய முறைப்படி ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஒருவர் யாழ் பெண்ணை திருமணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைஅமுதன் சிறுகதை - 1

# அகதி

அவசரமாக நிலக்கீழ் தொடரூந்திலிருந்து இறங்கிப் படிகளில் ஏறினேன் பின்னேரம் வேலைக்கும் போகவேணும் அதுக்குள்ள எத்தனை அலைபேசி வந்திருக்குமோ தெரியாது சனக்கூட்டம் அதிகமாக இருந்தது. எல்லோரின் முகத்திலும் அதே அவசரம்... சிலர் கைகளில் அன்றைய தினசரி... புத்தகம்,சிறிய அல்லது பெரிய கைப்பை..அதை விட அலைபேசியை நோண்டியபடி வருவதும் போவதுமாய் இருந்தனர். இரண்டு மூன்று எனப் படிகளில் காலை வைத்துவிட்டேன். கடகடவென்று மேலிருந்து வந்தவன் இடித்துவிட்டு ஏதும் நடவாதது போல கீழிறங்கினான். எதுவுமே அவனிடமிருந்து வரவில்லை...இடித்ததற்கான சமாதானம் அவனிடமிருந்து இல்லவே இல்லை.

தடுமாறியபடி என்னை நிதானப்படுத்தி திரும்பிப் பார்த்தேன். எதிர்பார்க்கவில்லை... கோபப்பட்டான். உன்னில தான் பிழை என்பது பார்த்தான். சரி..அவசரமாக்கும்..போகட்டும்' என்று என்னையே சமாதானப்படுத்திருக்கலாம். ஆனால் அவனின் பார்வை வேண்டுமென்றே இடித்தேன்..' நேற்றிரவு குடித்திருப்பானோ? கஞ்சா..பியர்...அல்லது எல்லாம் கலந்தோ..?அப்படியான துர்மணமே அவனிடமிருந்து வீசியது..அதுவும் நாம் அணியும் உடைகளில் அந்த மணம் படிந்துவிட்டால் அல்லது நமது சுவாசத்துள் நுழைந்துவிட்டால் அந்த மணம் கன நேரத்துக்கு வாட்டும்.. குமட்டும்..

அவனின் கண்கள் சிவப்பாய் இருந்தது..வேறு நாட்டிலிருந்து வந்திருக்கவேண்டும்... மேலிறங்கவும், கீழிறங்கவும் என்பதற்கான அடையாளங்களை பலகையில் எழுதியிருந்ததைப் பார்த்தேன். நான் சரியாகத்தான் படியேற இருக்கிறேன்..ஆனால் அவன்.. பிழையென்பதையும் ஒத்துக்கொள்ள மறுப்பவனாக கோபப்படுபவனாக....ஏன் இப்படி? பிழை யாரிடத்தில்..? அல்லது பிழை இல்லாதவர் யார்...? நான் கூட மாறி ஏறி பிழைவிட்டிருக்கலாம். உணர்ந்த பின் எனக்கு நானே சமாதானப்படுத்தவும் செய்தேன்.. இங்கு யார் யார் மீது குற்றம் கண்டுபிடிப்பது? கோபிப்பது?? ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்கும் பண்பை யாரும் வளர்த்துக்கொள்ளவில்லை என்பதே இதன் அர்த்தம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்க்களுக்காக வழிவிட்டுக்கொடுப்பதில் தப்பே இல்லை முட்டாள்களாக்கினினும்.. சிறுவயதில் அப்பா சொன்னது ஞாபகம் வந்தது.. சிறு புன்னகையைச் செலுத்திவிட்டு நகர்ந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்து திரும்பினேன்... கெட்ட வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வந்தன...'அகதி' என்று வந்து நாட்டை பழதாக்குகிறாய் தன்னை மறந்து என்னைப் பேசிக்கொண்டிதவனின் வார்த்தைகள் என்னுள் பாய்ந்தது..
அகதி... அவன்...?
நான் அகதி...சரி..அவன்...
பதில் வரவேயில்லை...
உள்ளுக்குள் அழுத படி.. விக்கித்து நின்றேன்...

----------------------

# மறக்கத்தகுமா?

வேரும் விழதும்
விதையுண்டு மாண்டது
காயப்படுகுழியில்
கயவர்கள்ஆட்சியில்
நாணயமற்ற நல்லாட்சி மரபு
முள்ளிவாய்காலில் மே 18.....

புதைகுழியெங்கும் வீரத்தமிழினம்
விதையுண்ட நாற்றாய்
புதையுண்டு போனது
உயிரின் காவுகை
உலக மௌனம்
ஆக்கிரமித்த அனலின் கொதிப்பு
மறக்கத்தகுமா மே18....

வாழையடி வாழையாய்
வாழ்ந்த கிராமம்
குலையோடு சாய்த்து
கோரமாய் அழித்தது
இனஅடையாளம் நிர்க்கதியானது
ஈர் நான்கு ஆண்டுகள்
ஈரவிழிக்குள் முள்ளிவாய்க்கால்
மறக்கத்தகுமா மே18.....

திருமதி.வசந்தா ஜெகதீசன்
யேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்காய் ஒருதாய் ஏங்க என் இதயம் சிரித்திருக்கும்!....

கௌசி - யேர்மனி

இரண்டு வயதிலே நீ இயல்பாய்த் தமிழ் பேசியபோதும், உன் குதலை மொழியால் குழைந்து குழைந்து காரணங்கள் கேட்டபோதும், இதயத்தை நிமிர்த்தி இமயம் போல் ஒரு நம்பிக்கை கொண்டிருந்தேன். வருங்கால நீதிபதி ஒன்று நியாயங்கேட்க நிமிர்ந்து வளர்கின்றதென்று. என் கன்னத்தில் அழுத்தி நீ முத்தமழை பொழியும்போது என் இதயம் கசிந்து அன்பு ஊற்றுக்களாய் பெருகிக் கொண்டேயிருந்தது. உன் இதயமொழி எங்கள் வாழ்க்கை மேடையிலே சங்கீத சாம்ராஜ்யம் நடத்தியிருந்தது.

பூமி சுழன்றதனால் வயதும் சுருண்டு கிடக்கவில்லை. சுயமாக 6 ஆக உயர்ந்து விட்டது. முதல் வகுப்பில் நீ ஸ்கூல்ரியூற்ற தூக்கியபோது நீ பல்கலைக்கழக அநுமதிப்பத்திரம் பெற்றுவந்த பெருமிதம் கொண்டோம். கள்ளி நீ எனக்கு எக்கஷ்டமும் தந்ததில்லை. உன் கணக்குப் பாடத்திற்கு உன் அப்பா உதவிக்கு வர நீ சந்தர்ப்பமும் தந்ததில்லை. நீ பருவ வயது கண்டால் சடங்கு செய்யத் தன் வங்கியிலே பணக்கணக்கை மட்டுமே கூட்டும் வேலையைத் தந்தைக்குக் கொடுத்திருந்தாய். ஆசிரியர்கள் எமை அழைத்து உனக்குப் புகழாரம் எங்களிடம் சூட்டும்போது, எங்கள் குடும்ப மரபணுக்கள், உங்கள் குடும்ப மரபணுக்கள் தொழிற்படுவதாய் நானும் உன் தந்தையும் போட்டா போட்டி போட்டோம்.

வில்லங்கம் வந்துவிட்டது. விடியாத பொழுதுகள் என் கண்களுக்குள் வந்துவிட்டன. விட்ட சனி ஒட்டிக் கொண்டது. வெட்ட வெளியிலே உச்சிச் சூரியனுக்கு அண்மையில் மல்லாந்து கிடப்பதுபோல் உடலெல்லாம் சுட்டெரிக்கிறது. நெருப்புத் தணலில் நிற்பது போல் தவிக்கிறேன். மகளே உன் வாய்ப்பேச்சு எங்கே மாயமாய்ப் போனது. சித்திரம் கட்டிலில் கிடப்பதுபோல் சிரித்தபடி படுக்கின்றாயே! உன் கலகலத்த சிரிப்பை தன் மருந்தால் சிக்கவைத்த வைத்தியரை நான் சிறை வைக்க முடியாது தவிக்கின்றேனே! முழிக்கும் உன் கண்களுக்காய் மூடாத எம் இமைகள் விரிந்த சாளரமாய் நிலைபெற்றுவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. அறிவுவாங்கப் பாடசாலை செல்கின்றாய் என்றுதான் நினைத்தோம். நீ காய்ச்சல் அல்லவா வாங்கி வந்திருக்கின்றாய். ஆண்டவனாம் வைத்தியர் ஆண்டவனுக்கு அடுத்தபடி யாரிடம் நாம் போய் நிற்போம். வைத்தியரிடம் தானே உயிர்ப்பிச்சைப் பாத்திரம் ஏந்துவோம்.

பச்சைக் குழந்தை உனக்கு அன்ரிபயோரிக் தரும்போது அவரைவிட நாமென்ன கற்றுவிட்டோம் என்றும் வைத்தியர் சொல்மிக்க மந்திரமில்லை என்றுமல்லவா நினைத்துவிட்டோம். பாவி கையால் தந்த அன்ரிபயோரிக் உனக்கு நஞ்சாகும் என்று அம்மா நான் நினைக்கவில்லையே! என் கையே உனக்கு நஞ்சு தந்துவிட்டதா! மகளே! இக்கையை நானே சுட்டெரிக்கப் போனேனே! உன் தந்தை அதற்கும் தடை போட்டுவிட்டாரே. என் கையைப் பார்க்க எனக்கே அருவருப்பாய் இருக்கிறது. ஒரு பிஞ்சை கட்டிலில் படுக்க வைத்துவிட்ட வைத்தியர், எப்படித்தான் தன் கட்டிலில் தூங்குகின்றாரோ புரியவில்லை. ஒரு வேளை இது இவர்களுக்குப் பழக்கமாய்ப் போய்விட்டதோ. அவதானம் தவறும் வைத்தியரும் கொலைகாரனும் ஒருவர் அல்லவா?

இரவுபகலாய் இதயமில்லாத உன் உடல் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், இதயம் இருந்தும் என்னால் தொழிற்பட முடியவில்லை. உன்னைப் பார்க்கையிலே உள்ளமெல்லாம் வேகுதடி. ஓர் கத்தி நான் எடுத்து என் இதயத்தை வெட்டி உன் உடலினுள் புதைத்துவிட என் இதயமது ஆவேசம் கொள்ளுதடி. ஆனால், சட்டம் என்ன கண்மூடிக் கொண்டா இருக்கிறது. உலகப் பந்தை நீ பார்க்க என் உடல் வருத்தம் பொறுத்தேனடி. என் இடுப்புவலி தாங்கி உன் உடலது கண்டு களித்தேனடி. இன்று உன் அருகே ஓர் இயந்திரம் உனக்காகத் துடிக்கும் போது, அதனைக் கையால் தொட்டு நாளும் கண்ணில் ஒற்றிக் கொள்கிறேன். ஆண்டவனே நேரில் வந்து உன் அருகே படுத்திருப்பதாய் உணர்கின்றேன்.

எத்தனை காலம் அவர் அருகே அமர்ந்திருக்க முடியும். உன் போல் ஓர் இதயம் எங்கோ உனக்காய்த் துடித்துக் கொண்டிருக்கின்றது. அது எப்போ உன் உடலுள் அமரப் போகின்றது. அவசரமாய் அதைக் கேட்க ஆசையாய் இருக்கிறது. ஆனால், அங்கும் ஓர் தாய் என் போல் பின் ஏங்கித் தான் என் ஏக்கம் தீர்க்கவேண்டும். அப்போது கூட அவளுக்காய் நான் கண்ணீர் சிந்திக் கொண்டிருப்பேன். இதயம் தேடி இரவுபகலாய் விழித்திருக்கிறாள் இத்தாய்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிகரற்ற தாதியர் சேவை......



உலகில் முதற்தாதி எம்மைப்பெற்றதாயே ஆகும். புத்தபகவான் கூறியது போல தருமம் வீட்டிலிருந்தே ஆரம்பமாகிறது. முதல் தாயான தாயே ஒரு பிள்ளையை பெற்று வளர்த்தெடுத்து வீட்டுக்கு வெளியே கொண்டு வருகிறாளோ அதே போலவே தாதியரும் மருத்துவ சாலையில் நாம் நோயாளியாக அனுமதிக்கப்பட்ட நாள்முதல் சிகிச்சை பெற்று வெளியேறும் வரை ஒரு சகோதரியாக அன்னையாக செயற்பட்டு மருத்துவரின் அறிவுரைக்கு அமைவாகவும் கடமைகளைப் பகல் இரவு பாராது நித்திரை விழித்து செயற்பட்டு வருகின்றனர். எப்படி வீடுகளில் எமது சகோதரிமார் அன்னையர் நேசத்துடன் பழகி வருகின்றனரோ? அதே போலவே தாதியருக்கும் சகோதரி அன்னை போன்ற பதவிகள் வழங்கப்பட்டு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மருத்துவர் நோயாளியுடன் ஒரு சில நிமிடங்களே கடமையில் ஈடுபடுவார். ஆனால் சகோதரிமார் எந்தெந்த நேரங்களில் மருந்துகள் கொடுத்து ஊசி மருந்துகளை ஏற்றி அவ்வப்போது உணவுகள் அளித்து உடைகளை அணிவித்து சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விதமாக உடைகளை அணிவித்து மலசலகூடத்திற்குச் செல்வதற்கு உதவியும் செய்து நேரத்தை செலவிடுபவர்கள் அவர்களே!

தாதியார் சேவை பல வளிகளில் பிரிக்கப்படுகிறன..

1. நோயாளர்களைப் பாதுகாத்தல்
2. வயோதிபர்களைப் பாதுகாத்தல்
3. மாற்றுத்திறனாளிகளைப் (வலம் குறைந்த)பாதுகாத்தல்
4. நோயாளர்களைப் பராமரித்தல்
5.இரத்தப்பெருக்கு இருதய வருத்தங்கள் கடுமையான காயங்கள் போன்றவற்றை அவதானமாக கையாளுதல்
6. மகட்பேறும் குழந்தைகளுக்கான நோய்கள் பற்றிய அறிவு கொண்டிருத்தல் எந்த ஒரு கட்டத்திலும் நோயாளிகளின் எதிர்பார்ப்புக்களை நிராகரித்தல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் மனத்திடத்தை ஏற்படுத்தி முகமலர்ச்சியுடன் செயற்பட வேண்டும். தொற்று நோய்கள் மேரோகம் Aids எயிட்ஸ் தொழுநோய் போன்ற ஆபத்தான நோய்களுக்கு ஆளானவர்களை பணிவுடனும் உற்சாகமூட்டும் வகையில் அவர்களை தட்டிக்கொடுக்கும் வகையில் அவர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறியும் உற்சாகப்படுத்தல் வேண்டும்.

நோயாளிகள் வருத்தம் தாங்காமல் வேதனைப்படும்போதும் அதற்குச் சரிசமமாக வாயடித்தல் தர்க்கத்தில் ஈடுபடவோ கூடாது. பார்வையாளர்கள் நோயாளிகளைப் பார்த்து ஆறுதல் கூறிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் ( நேரம் போய் விட்டது வெளியேறுங்கள்) என்று கடுமையான வார்த்தைகளால் கூறக்கூடாது. அன்பாக அழைத்து நாளைக்கு நீங்கள் பார்க்கலாம் என அன்பாக அணுக வேண்டும்.
என்றும் அந்த நோயாளியை ஆறுதல் படுத்த வேண்டும். நோயாளிகள் ஈரமாய் இருந்தால் மாற்று உடுப்புக்கள் அணிய வேண்டும். அசுத்தமாகவோ கட்டில் இருத்தல் கூடாது. எப்போதும் சுகாதாரத்தை அவதானமாகப் பேண வேண்டும். ஒரு சில நோயாளிகளுக்குச் சலம் வெளியேறும் நேரங்களை அட்டவணைப்படுத்தி அதை மருத்துவரிடம் உரிய நேரத்தில் வைத்தியரிடம் காட்ட வேண்டும். தேவை ஏற்படும் போது ஒட்சிசன் சேலைன் இவற்றை அளவாக அவதானத்துடனும் வைத்தியருடைய கூற்றுக் கிணங்க கையாள வேண்டும்.

ஏனெனில் வயோதிபருக்கு ஏற்படும் நோய்கள் பார தூரமாக இருப்பதால் அவர்கள் ஏசுவார்கள் மறுப்பார்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் எல்லாம் உங்கள் நன்மைக்குத்தான் என ஆறுதல் கூற வேண்டும். ஒரு சில நேரங்களில் திருப்பித் திருப்பிச் சொல்லுவார்கள் அல்லது அவர்களுக்கு இருக்கும் மணியை அடித்துச்சினம் கொள்ள வைப்பார்கள் எனவே இதை ஒரு போதும் பொருட்படுத்தக்கூடாது. வலம் குறைந்தவர்களுடன் போகும் பொழுது அவர்களுடைய ஊனமுற்ற பாகங்களை அவசரமாகவோ ஆத்திரமோ பார்க்க க்கூடாது .

மாற்றுத்திறனாளிகள் நீரிழிவு நோயாளிகளுக்கு ஊசிமருந்து ஏற்றும்போது ஈனன உறுப்புகளுக்கு cadheter வைக்கும்போதும் உறைகள் அணிவிக்கும்போதும் மிகவும் நுணுக்கமாகவும் நோகப்படுத்தாமலும் இலகுபடுத்துவதற்கான களிகளைப் பூசி ஊசி செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை அணிவிக்கும்போது இக்கழியைப்பூசி இலகுவாக இருப்பதற்கும் நோய் ஏற்படாமல் இருப்பதற்கும் வசதியாக செயற்படுத்தல் வேண்டும்.

மனநோயாளர்களை அவதானித்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய நோயின் தன்மையை பொறுத்து ஏற்ற விடயமான சிகிச்சை செய்ய வேண்டும்
தொழுநோயாளர்களுடைய நோய் பற்றியோ வாழ்நாள் பற்றியோ ஒன்றும் கூறக்கூடாது. அவர்களுக்கு அன்பான வார்த்தைகளாலும் புரிய வைக்க வேண்டும் அவர்களுக்குரிய காலத்திலும் தேயைான மருந்துகளை கிரமமாகக் கொடுத்தல் வேண்டும். எயிட்ஸ் நோயாளிமார் அவர்களை அலட்சியமாகவோ கேவலமாகவோ கருதக்கூடாது.

இரத்த அழுத்தம் இதய நோயாளர் பகுதிக்குக் கைகளை இரசாயன திரவத்தில் கழுவி உள் செல்ல வேண்டும் அவர்களுக்கு நோய் தொற்றாத உடைகளை அணிந்து செல்லல் வேண்டும். இத்தகைய பண்பும் பரிதாபமும் தேவையும் ஆறுதலும் விடா முயற்சியும் கொண்ட சேவையை ஆற்றும் தாதிமாருக்குப் பொதுமக்கள் எவ்வளவு கடமைப்பட்டுள்ளார்கள். உலகநாட்டு யுத்தங்களிலும் போராட்டம் தாதியர் உதவி செய்தவர்கள். மனித நேய அடிப்படையில் முதலுதவி சிகிச்சை செய்தல் வேண்டும்.

இற்றைக்கு 150 வருடங்களுக்கு முதல் கிறிமியன் யுத்தத்தின் போது இத்தாலி நாட்டுத் தாதி புளோரன்ஸ் நைற்றிங்கேள் அஞ்சா நெஞ்சத்துடன் கையில் ஒரு விளக்கை ஏந்திய வண்ணம் போர்க்களம் சென்று காயப்பட்ட வீரரை இனம் கண்டு அவற்றிற்கேற்ப முதலுதவி செய்தார். இதை இலக்கணமாக வைத்து இன்று பட்டமளிக்கும் சத்தியபிரமாணம் புளோராரன்சு சின்னமாக கையில் ஏந்தியவண்ணம் செய்வது அம்மையாருக்கு ஒரு கௌரவமாக கருதப்படுகிறது

அன்னை பரிசுத்த திரேசா தொழுநோயாளர்களைக் கையால் தடவி பரிசோதித்த ஆண்டவருடைய செபங்களை அவர்களுடைய காதுகளில் ஓதியும் இறுதியாய் விடுதியும் ஒன்றை அமைத்தும் சேவை புரிந்த அன்னை திரேசாவும் தாதியருள் ஒருவர் தான்.தாதியர் அணியும் சின்னங்களுக்கு ஏற்ற விதமாக அதன் சின்னங்களை வெளிப்படுத்தும் அறிவுரைகளுக்கு ஏற்ப நகர்த்தலும் முறையாக கையாள்தலும் தாதி புளோரன்ஸ் நைற்றிங்கேள் அஞ்சா நெஞ்சத்துடன் கையில் ஒரு விளக்கை ஏந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத பணியாற்றியமை மிக மிக முக்கியம் என்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். தன்னலமற்ற தாதியர் சேவை சிறப்புற வேண்டும் எனவும் மேற்குறிப்பிட்ட அனைத்தும் அவற்றிற்கேற்ப வாழ்க்கை நெறிகளையும் பின் பற்றுவதும் தலையாய கடமையாகும் இவ்வளவு சேவையும் பாராட்டி அறிமுகம் செய்த தாதியர் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி விடை பெறுகின்றேன்...

ஆக்கம்: - பத்மகுணசீலன் Ostring 113, 24143 Kiel - Germany

By G.Pathmagunaseelan. C.M St.J

Lay Lecturer ( Adult First Aid ) Ex. Headquarter Staff Officer Grade I & Provincial Commisioner ( Sab ) St. John Ambulance Brigade Colombo Sri Lanka Promoting Member of Johannieter Unfall Hilfe Germany. Member of ASB Germany Member of German Red Cross

Note: for your reference and information I attached herewith some of the very important items of

# Madame Florence Nightingale



ஃப்ளோரன்ஸ், டுஸ்கானியின் கிராண்ட் டூச்சி
பிறப்பு 12-5-1820
இறப்பு 13-8-1910
பார்க் லேன், இலண்டன், ஐக்கிய இராச்சியம்
தேசியம் இங்கிலாந்து
மற்ற பெயர்கள் விளக்கேந்திய சீமாட்டி, கைவிளக்கேந்திய காரிகை
கல்வி மருத்துவம்
பணி செவிலியர்
அறியப்படுவது நவீன செவிலியத் துறையின் முன்னோடி

புளோரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) மே 12, 1820 - ஆகஸ்ட் 13, 1910) நவீன தாதியியல் தாதி. போரில் காயப்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்டவர். தாதிகளுக்கான பயிற்சிப் பள்ளியையும் இவரே முதலில் துவங்கினார். விளக்கேந்திய சீமாட்டி, கைவிளக்கேந்திய காரிகை (The Lady with the Lamp) என்று அழைக்கப்பட்டார். இவர் ஒரு எழுத்தாளரும், புள்ளியியலாளரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் மறு உருவமாய் அன்னை தெரேசா...



அன்னை என்ற வார்த்தை சிலரின் வாழ்க்கைக்கு அடைமொழியாய் நிற்கும்போது அதற்கு அழகு கூடுகிறது. மெசடோனியா நாட்டில் எங்கோ ஒரு மூலையில் அல்பேனிய இனத்தில் பிறந்த ஆக்னஸ், பின்னாளில் தெரேசாவாக உருவெடுத்தபோது.அத்தகைய அன்னை பூமியில் அவதரித்த நாள்.அவருக்கு இந்த அன்னை என்ற அடைமொழி அழகாய் பொருந்தி நின்றது. "அன்னை தெரேசா" என்று உச்சரிக்கும்போதே சாந்தமே உருவான ஒரு கருணை பொங்கிய முகம் நம் மனக்கண் முன்னால் ஒரு நொடி நிழலாடிச் செல்வது தான் உண்மை..

கடவுள் உள்ளமே.. கருணை இல்லமே.. அன்னை தெரசா பிறந்த நாள் கருணையின் உருவமாக, சேவையின் உறைவிடமாக இன்றளவும் புகழப் படுபவர் அன்னை தெரசா. 26.8.2017 அன்று அவரது 106வது பிறந்தநாள். அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாக கொண்ட அன்னை தெரசாவின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ.

இவர் கடந்த 1910-ம் ஆண்டு அகஸ்டு மாதம் 26-ந்தேதி பிறந்தார். இவர் இந்திய குடியுரிமை பெற்ற ஒரு ரோமன் கத்தோலிக்க அருட்சகோதரி ஆவார். 12 வயதில் முதன்முதலாக ஆன்மிக அழைப்பை உணர்ந்த அன்னை தெரசா, தனது 18 வயதில் கன்னிகா ஸ்திரீயாக மாறுவது என முடிவு செய்தார். இதற்காக வீட்டைவிட்டு வெளியேறி, "சகோதரி தெரசா" என தன் பெயரை மாற்றிக்கொண்டார். 1923-ல் "சோடாலிட்டி ஆஃப் சில்ரன் ஆஃப் மேரி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சமூக சேவை அமைப்பில் இணைந்தார்.பின், 1929-ல் கொல்கத்தா வந்த அன்னை தெரசா, அங்கு ஒரு பள்ளியில் சுமார் 17 ஆண்டுகள் பணிபுரிந்தார். 1946-ல் ஏழைகளுக்கு உதவுவதற்காக கற்பித்தல் பணியிலிருந்து விலகிய அன்னை தெரசா, சேவை செய்வதற்காக செவிலியர் பணிக்கான மருத்துவப் பயிற்சி பெற்றார்.

1950-ம் ஆண்டு, இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார்.

நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழை எளியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், அனாதைகளுக்கும், இறக்கும் தறுவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றினார். 1952-ல் "நிர்மல் ஹ்ருதய்" என்ற இல்லத்தைத் தொடங்கினார். கொல்கத்தா தெருக்களில் ஆதரவற்றுக் கிடந்த ஏராளமான தொழுநோயாளிகளை இங்கு கொண்டு வந்து பராமரித்தார். அவர்களின் காயங்களுக்கு மருந்திட்டார். முதலில் இந்தியா முழுவதும் நிறுவப்பட்ட அன்பின் பணியாளர் சபை, பின்னர் வெளிநாடுகளுக்கும் சென்றது. சமூகசேவை, சகிப்புத்தன்மை மூலம் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியது. அதன் தொடர்ச்சியாக 1979-ல் அமைதிக்கான நோபல் பரிசும், 1980-ல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதும் அன்னை தெரசாவிற்குக் கிடைத்தது. இது மட்டுமின்றி ஜவஹர்லால் நேரு விருது, பாரத ரத்னா விருது, அமெரிக்க ஜனாதிபதி பதக்கம், பிலிப்பைன்சின் ரமன் மகசேசே விருது, ஆர்டர் ஆஃப் ஆஸ்திரேலியா, மற்றும் இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளின் ஆர்டர் ஆஃப் மெரிட் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட விருதுகளையும் கவுரவங்களையும் அவர் பெற்றுள்ளார்.

அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை எய்ட்ஸ், தொழுநோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற சேவைகளில் பங்காற்றி வருகிறது.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக மானுட சேவையில் ஈடுபட்டு வந்த அன்னை தெரசா 1997-ம் ஆண்டு 87-வது வயதில் மறைந்தார். இறப்புக்குப் பின் அவருக்கு திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முக்திபேறு அடைந்தவராக அறிவிக்கப்பட்டு கொல்கத்தாவின் அருளாளர் தெரசா என்று பட்டம் சூட்டப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சே" என்னும் மந்திரச் சொல்!...



'சாவைப் பற்றி நான் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. நான் இறந்து போனால் எனதுகைத்துப்பாக்கியை தோழர்கள் எடுத்துக்கொள்வார்கள். அப்போதும், அதிலிருந்து தோட்டாக்கள் சீறிப்பாயும்" என்று முழங்கியவர் சேகுவேரா. அவருடைய நினைவுத்தினம் (09-10-2016) அப்போது "சே" வுக்கு 27 வயதுதான். கியூபா தனது சொந்த நாடு என்ற காரணத்தினால்.: பிடல் காஸ்ட்ரோ போராட வேண்டிய அவசியம் இயல்பானது. ஆனால், "சே"வுக்கு அப்படிஅல்ல. தனக்கு முற்றிலும் சம்பந்தமே இல்லாத ஒரு தேசத்தில் அந்த நாட்டு மக்களின்விடுதலைக்காகத் தன் உயிரைப் பணயம்வைத்து ஆயுதம் எடுப்பது என்பது, உலகவரலாற்றில் எப்போதும் எங்கும் நிகழ்ந்திராத ஒன்று. இந்தக் காரணத்தால் தான் சேகுவேரா மனிதருள் மாணிக்கமாகப் போற்றப்படுகிறார்.

1958-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புரட்சிப் படை ஹவானாவுக்குள் ஊடுருவியபோது, கியூபா முழுவதும் காஸ்ட்ரோவிடம் வந்துசேர்ந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வெற்றி உலக நாடுகள் அனைத்தையும் பெரும் வியப்பில் ஆழ்த்தியது. அப்போது, "டைம்" பத்திரிகையானது இவ்வாறு ஒரு தலையங்கம் எழுதியது. "புரட்சிகளின் மூளை சே" என்று.

கியூபா விடுதலையடைந்து காஸ்ட்ரோ அதிபர் ஆனபிறகு, "சே" விவசாயத் துறையின் தேசியத் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன்பின், கியூபா தேசிய வங்கியில் தலைவராக நியமனம் செய்யப்பட்டு ரூபாய் நோட்டுகளில் "சே" எனக் கையெழுத்திடும் அளவுக்கு உயர்ந்தார். பின், தொழில் துறை அமைச்சராகவும் பதவி வகித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு பதவிகள் வகித்தபோதும் எப்போதும் தன்னை ஒரு சராசரி குடிமகனாகவே நினைத்து விவசாயம் செய்துவந்தார். சேகுவேராவுக்கும் பிடலுக்கும் இடையே யுத்தத்துக்கு முன்னும், பின்னும் சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அவர்கள் நட்பை உயிரினும் மேலாகப் போற்றி வந்தனர்.

"அமெரிக்கா ஏகாதிபத்தியத்தை, ஒரு மூன்றாம் உலக நாடுகளின் பிரதிநிதியாக தன்னால் வேரறுக்க முடியும்" என்று ஒருமித்த மனதோடு நம்பினார். கியூபாவுக்கு ஆயுதங்கள் தருவதாக ரஷ்யா சொன்னபோது, "ரஷ்யாவின் ஆயுதங்கள் கியூபாவில் இறங்கினால், அவைகள் அமெரிக்காவின் பெருநகரங்களைக் குறிவைக்கும்" என்று தைரியமாகச் சொன்னார் "சே"

இதற்குக் காரணம், கியூபா மீது அமெரிக்கா போட்ட பொருளாதாரத் தடையே ஆகும். அமெரிக்க தனியார் தொலைக்காட்சி ஒன்று,நேர்காணலுக்காக "சே"வை அழைத்தது. அதில், "அமெரிக்கா ஒரு கழுதைப்புலி." அதன், ஏகாதிபத்தியத்தை நான் அடியோடு கருவறுப்பேன்" என்று அமெரிக்க மண்ணிலேயே கம்பீரமாக கர்ஜித்தார்.

**"சே"வின் கடைசி நிமிடங்கள்!**

1967 அக்டோபர் 8-ம் தேதி காலைவேளையில்... யூரோ கணவாயை கெரில்லா வீரகளுடன் கடந்து சென்றார் சே. அங்கு ஆடு மேய்க்கும் பெண்ணின் மீது பரிதாபப்பட்டு 50 பெஸோக்களைப் பரிசளித்தார்.
நண்பகல் வேளையில் அந்தப் பெண் பொலிவிய ராணுவத்துக்கு "சே"வின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்தார். "சே"வைச் சுற்றி வளைத்த ராணுவம் சரமாரியாகச் சுட்டுத்தள்ளியது. பதிலுக்கு, கெரில்லா வீரர்களும் தாக்குதல் நடத்தினர்.

ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் "சே"வின் காலில் குண்டடிப்பட்டது. அப்போது, "சே" சொன்னார்... "நான் இறப்பதைக் காட்டிலும் உயிரோடு இருப்பதுதான் உங்களுக்குப் பயன் தரும்" என்று. குண்டடிப்பட்ட "சே"வை, வீரர்கள் கைத்தாங்கலாக அழைத்துச்சென்று பள்ளிக்கூடம் ஒன்றில் தங்கவைத்தனர்.

"சே" கொல்லப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன், அவருக்கு அந்தப் பள்ளிக்கூடத்தில் உணவுகொடுத்துப் பேசிக் கொண்டிருந்த ஆசிரியை ஜூலியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோர்ட்டஸ் என்னும் 19 வயது பெண்மணியிடம், பள்ளிக்கூடச் சூழலைப் பார்த்துவிட்டு இவ்வாறாகச் சொன்னார்.

"இதுபோன்ற சூழலில் எப்படிக் குழந்தைகள் இங்கு படிப்பார்கள்? ஒருவேளை நான் பிழைத்தால், உங்களுக்கு நல்ல பள்ளிக்கூடம் கட்டித் தருவேன்." "சே" எப்போதும் ஒரு புரட்சியாளர்தான். ஆம், மக்களுக்கான புரட்சியாளர் அவர். "சே" வைச் சுட்டுக்கொல்ல வேண்டும். யார் அந்தக் காரியத்தை செய்கிறீர்கள்" என்று கேட்டபோது, "மரியோ ஜேமி" என்னும் பொலிவிய ராணுவ சர்ஜன் அந்தக் கொடும்செயலைச் செய்வதற்கு ஒப்புக்கொள்கிறான்.

கைகள் கட்டப்பட்ட நிலையில் தனி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட "சே" "மண்டியிட்டு உயிர்வாழ்வதைவிட நின்றுகொண்டு சாவது எவ்வளவோ மேல்" என்றார். ஆனால், அந்த ராணுவ வீரனோ, "சே" வை ஒரு கோழைபோல் கொல்வதற்குத் தயாரானான். "கடைசி நிமிடத்தில்கூட என்னை நிற்கவைத்துச் சுடுங்கள்" என்றார் "சே". ஆனால், அந்தக் கோழையோ "சே"வின் பார்வையைக்கூட நம்மால் நேருக்கு நேர் நின்று எதிர்கொள்ள முடியாது என்ற காரணத்தினாலோ என்னவோ, அந்த மாவீரர் சொன்னதை அலட்சியப்படுத்தினான். "கோழையே... நீ சுடுவது ஒரு "சே"வை அல்ல. ஒரு சாதாரண மனிதனைத்தான்" என்று இதயம்கிழிக்க, கண்கள் மின்ன தன்னுடைய கடைசி வார்த்தைகளை உமிழ்ந்தார் "சே". எந்தத் தேசம் அவரை அழிப்பதில் தீவிர முனைப்புக் காட்டியதோ, எந்தத் தேசம் அவர் வரலாற்றை முழுவதும் அழிக்க வேண்டும் என்று எண்ணியதோ,

அந்தத் தேசத்தில்தான் இன்று "சே"வின் முகம் பதிக்கப்பட்ட பொருட்கள் அதிகமாக விற்பனையாகின்றன. எந்தத் தேசம் அவர் பெயரைக் காற்றில் கரைந்துபோக நினைத்ததோ, அந்தப் பெயர்தான் உலகம் முழுவதும் காற்றில் கலந்து கோடிக்கணக்கான இளைஞர்களின் தாரக மந்திரமாக உச்சரிக்கப்படுகிறது.

கியூபாவில் இப்போதும் ஒரு வழக்கம் உண்டு. அதிகாலையில் வகுப்பறைகளுக்குச்செல்லும் முன், அத்தனை குழந்தைகளும் ஒருமித்த குரலில் முழங்குகிற வாசகம் என்ன தெரியுமா? "ஆம், எங்களது முன்னோர்கள் கம்யூனிஸ்ட்களாக இருந்தனர். நாங்கள் "சே"வைப்போல இருப்போம்!" "விளைவுகளை ஏற்படுத்தாத எந்த ஒரு சொல்லும் வீணானது" என்பதே அவர் அடிக்கடி கூறும் வார்த்தைகளாகும்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை செய்திக் குறிப்புக்கள்....

-இலங்கையில் 15 சதவீதமான பிள்ளைகள் மன அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள் அதே போல் நாட்டில் 15 சதவீதமான பிள்ளைகள் நீரிழிவு நோய்க்கு ஆளாகியிருக்கின்றார்கள்.

-இலங்கையில் 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

-14 சதவீதமான பிள்ளைகள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எடுப்பதற்கு முன்னரே பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்றார்கள்.

-13 தொடக்கம் 15 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளில் 11சதவீதமான பிள்ளைகள் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருக்கின்றார்கள். இவை சிறுவர்கள் தொடர்பாக சுகாதார அமைச்சு, சிறுவர் செயலகம் மற்றும் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட அண்மைக்கால தகவல்களாகும்.

-இலங்கையைப் பொறுத்தவரையில் யுத்தகாலத்திலும், யுத்தத்துக்குப் பின்னரும் ஆயிரக் கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர்.அத்துடன் கடந்த காலத்தில் இடம்பெற்ற வெவ்வேறு கலவரங்களின் போதும் அதிக எண்ணிக்கையானவர்கள் காணாமல் போயுள்ளனர்.இவ்வாறு சுமார் 25 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காணாமல் போய் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

-233 பேரின் உயிரை பலியெடுத்த ரயில் கடந்த ஆறு மாதங்களில் ரயிலில் மோதுண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 233 ஆக அதிகரித்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

-நாட்டில் காணப்படுகின்ற வறட்சி நிலைமை காரணமாக இதுவரை 17 மாவட்டங்களை சேர்ந்த 500,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பிரதேச வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பாதிக்கப்பட்ட குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா பெறுமதியான உலர் உணவு கூப்பன் அட்டை வழங்கும் திட்டம் தொடர்பான ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

-இலங்கை மக்கள் 648 வகையான போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளதாக போதைப்பொருள் தடுப்பு சிறப்பு பணிப்பிரிவு தெரிவித்துள்ளது. மேலும், நாட்டு ஆண்களில் 35 சதவீதமானோர் மது அருந்துவதாகவும் அவர் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில்!...

## பெரிது பெரிது!

வட கொரிய தலைநகர் பியோங்யாங்கில் உள்ள Rungardo May Day stadium என்ற சதுக்கமே உலகின் மிகப்பெரிய சதுக்கமாகக் கருதப்படுகிறது. இதில் 150,000 மக்கள் அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளைப் பார்வையிட முடியும். அதேவேளை, வட கொரிய இராணுவமும் உலகின் மிகப்பெரிய இராணுவமாக இருக்கின்றது. அதன் தொகை 7.7 மில்லியன் (77 இலட்சம்) ஆகும். அதன் எதிரி நாடான தென் கொரியாவின் இராணுவத்தின் எண்ணிக்கை 6.6 மில்லியன் (66 இலட்சம்) ஆகும்.

## கியூபாவில் வானத்தின் சரிபாதி பெண்கள்!

கியூபா உண்மையான ஒரு சோசலிச நாடாக இருப்பதால், அங்கு பெண்களுக்கு எல்லாத்துறைகளிலும் சமத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, அந்நாட்டின் நாடாளுமன்றமான தேசிய மக்கள் பேரவையில் 48 சதவீதமான உறுப்பினர்களாகப் பெண்களே இருக்கின்றனர். இது "வானத்தின் சரிபாதி பெண்களே" என்ற சோசலிச கோட்பாட்டின் அடிப்படையை எடுத்துக் காட்டுகிறது. கியூபாவில் வழங்கப்பட்டுள்ளது போன்ற பெண்களுக்கான அரசியல் சமத்துவம் ஜனநாயகம் பற்றி உரத்துப் பேசும் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் கூட இருக்குமோ என்னவோ?

## 1000 ஆண்டுகால உலகின் மிகச் சிறந்த சிந்தனையாளர்!

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் மனித இனம் கண்ட மிகப்பெரும் (சிறந்த) சிந்தனையாளர் யார்? என்ற கேள்விக்கு விடை பெறும் முகமாக பிபிசி ஒலிபரப்புச் சேவை ஒரு தொடர்ச்சியான கருத்துக் கணிப்பை மத்தியில் நடாத்தியது. இந்தக் கருத்துக் கணிப்பு நடாத்தப்பட்ட பொழுது கிழக்கு - மேற்கு ஜேர்மனிகளுக்கிடையிலான பெர்லின் சுவர் இடிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியிருந்தன. அக்கணக்கெடுப்பின் முடிவின்படி, கார்ல் மாக்ஸ் முதலாவது இடத்திலும், அவரது கொள்கையைப் பெரிதும் விரும்பிய விஞ்ஞானி ஐன்ஸ்ரைன் இரண்டாமிடத்திலும், மற்றும் விஞ்ஞானிகளான நியூற்றன், டார்வின் ஆகியோர் முறையே மூன்றாம் நான்காம் இடத்திலும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்



பிறப்பு ஆகத்து 2, 1913 ஊர்காவற்துறை,யாழ்ப்பாணம்,இலங்கை
இறப்பு செப்டம்பர் 1, 1980(அகவை 67)யாழ்ப்பாணம்
கல்வி முனைவர் பட்டம்(லண்டன்)
முதுகலை இலக்கியப் பட்டம் (MLitt)(அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
பிஏ(செனட் பேர்னாட் செமினறி, கொழும்பு, 1934)
புனித பத்திரிசியார் கல்லூரி (யாழ்ப்பாணம், 1920-22)

தனிநாயகம் அடிகள் என்கிற வண. சேவியர் தனிநாயகம் (Rev. Xavier S. Thani Nayagam ஆகஸ்ட் 2, 1913 - செப்டம்பர் 1, 1980) ஈழத்துத் தமிழறிஞர், கல்வியாளர். தமிழ், ஆங்கிலம் தவிர ஸ்பானியம், உரோம மொழி, போர்த்துகீசியம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழிவாற்றவும் வல்லவர் 1964 ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க அடிகோலினார். இந்த நிறுவனமே தொடர்ச்சியாக எட்டு உலகளாவிய ரீதியிலான உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்தியது. அடிகள் உயிருடன் இருந்த காலப்பகுதியில் நான்கு மாநாடுகள் நடத்தப் பெற்றன. இவர் பொதுச் செயலாளராவிருந்து முதல் மகாநாட்டினை கோலாலம்பூரில் பல உலகநாடுகளின் தமிழ் ஆய்வாளர்களை வரவழைத்து வெற்றிகரமாக நடாத்திய பெருமை இவரைச் சார்ந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

தொடக்கக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆங்கிலவழிக் கல்வி பயின்றார். பின்னர் 1931 முதல் 1934 வரை கொழும்பில் புனித பேர்னாட் மறைப்பள்ளியில் சேர்ந்து இறையியல் கல்வி பயின்றார்.

## ஆசிரியப் பணி

1952 தொடக்கம் 1961 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் 1955 முதல் 1957 வரை இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் வழியாகக் கல்வியியல் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து கல்வியியலில் முனைவர் பட்டத்தினை இரண்டாவது முறையாகப் பெற்றுக் கொண்டார். 1961 முதல் 1968ஆம் ஆண்டுவரை மலேசியாவில் உள்ள மலாய் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறையின் தலைவராகவும் தமிழ்த் துறையின் பீடாதிபதியாகவும் தமிழ் பேராசிரியாராகவும் பணியாற்றினார். இக்காலத்திலேயே பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களும் இங்கு பேராசியரியராகக் கடமையாற்றினார். 1969 இல் மலேசியாவை விட்டு நீங்கியவுடன் பாரிசு மற்றும் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

## உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்

உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் (International Association for Tamil Research (IATR) முதல் கூட்டம் தில்லியில் 1964 சனவரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தனிநாயகம் அடிகளாருடன், பேராசிரியர் கமில் சுவெலபில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வ. ஐ. சுப்பிரமணியம் ஆகியோர் அழைப்பாளர்களாக இருந்து செயற்பட்டனர்.

## கோலாலம்பூர் மாநாடு முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர்ச்சியாக எட்டு உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளை பல உலக நாடுகளில் நடத்தியது. அடிகளார் உயிருடன் இருந்த காலப்பகுதியில் நான்கு மகாநாடுகள் நடைபெற்றன. இவர் பொதுச் செயலாளராவிருந்து முதல் மகாநாட்டினை 1966, ஏப்ரல் 16 - 23 தேதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு நூல்கள்

தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களும் எழுதி வெளியிட்டார். தமிழ்த் தூது (1952) என்ற நூல் அடங்கலாக மொத்தம் 137 நூல்களை எழுதினார். அடிகாளார் எழுதிய இலக்கியக் கட்டுரைகளின் முதல் தொகுப்பு தமிழ்த் தூது' என்பதாகும். இது 1952 ல் வெளியிடப்பட்டது. அடிகளார் எழுதிய 30 ஆய்வுக்கட்டுரைகள் தமிழ் காலாசரம் சஞ்சிகையில் வெளிவந்த 70 கட்டுரைகள் பலவேறு இதழ்களிலும் கருத்தரங்க மலர்களிலும் வெளிவந்துள்ளன.

அடிகளாரால் எழுதப்பட்ட சில நூல்களின் விபரங்கள் வருமாறு:

The Carthaginian Clergy
Nature in the ancient poetry
Aspects of Tamil Humanism
Indian thought and Roman Stoicism
Educational thoughts in ancient Tamil literature
தமிழர் பண்பாடு நேற்றும் இன்றும் நாளையும்.
தமிழ்த்தூது
ஒரே உலகம்
திருவள்ளுவர்
உலக ஒழுக்கவியலில் திருக்குறள்.
Reference guide to Tamil studies
Tamil Studies Abroad
Tamil Culture and Civilization

## மறைவு

அடிகளார் இறப்பதற்கு நான்கு மாதத்திற்கு முன்னர் ஏப்ரல் 1980 இல் தந்தை செல்வா நினைவுப் பேருரையை கொழும்பில் நிகழ்த்தினார். அதே ஆண்டு மே மாதம் வேலணையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் எழுதியதமிழ்மறை விருந்துஎன்ற நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார். அதன்பின், பெரிதும் உடல் நலிவுற்ற தனிநாயகம் அடிகளார், 1980 செப்டம்பர் மாலை 6.30 மணியளவில் உயிர் நீத்தார்.


## கௌரவம்

1981 இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அடிகளாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவரது சிலை ஒன்றும் தமிழகக் கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவரின் இறப்புக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது நெடுந்தீவு மக்கள் தமது மண்ணின் மைந்தனாகிய தனிநாயகம் அடிகளுக்கு ஆளுயர சிலை அமைத்துள்ளனர். 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனிநாயக அடிகளின் தமிழ்ச் சேவையினை நினைவு கூர்ந்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் துணைவேந்தராகப் பணியாற்றியபோது அவருக்கு இறப்புக்குப் பின்னரான கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. நூற்றாண்டு விழா சென்னையில் 2013 பெப்ரவரி 16 அன்று தனிநாயக அடிகளாரின் நினைவை போற்றும் வகையில் நூற்றாண்டு தொடக்க விழா நடைபெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ள ராம்நாத் கடந்து வந்த பாதை...



இந்தியாவின் 14 வது ஜனாதிபதியாக ராம்நாத் கோவிந்த் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.1945 ஆம் ஆண்டு தெஹாத் கான்பூர் மாவட்டத்தில் தலித் குடும்பத்தில் ராம்நாத் கோவிந்த் பிறந்துள்ளார். ராம்நாத் கோவிந்த் கான்பூர் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து விட்டு டெல்லிக்குச் சென்று ஐஏஎஸ் நுழைவுத் தேர்வுக்குத் தயாரானார். ஆனால் இரண்டு முறை ஐஏஎஸ் தேர்வு எழுதியும் அவரால் வெற்றி பெற முடியவில்லை. மூன்றாவது முறை மறுபடியும் எழுதி ஒரு வழியாகத் தேர்ச்சி பெற்றார். ஆனால்,ஒரு ஐஏஸ் அதிகாரியாக தனது பணியை தொடரவில்லை. மாறாக வழக்கறிஞர் படிப்பினை படித்து முடித்த இவர், 1977 ஆம் ஆண்டு முதல் 1979 வரை டெல்லி உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசின் வழக்கறிஞராக பணிபுரிந்திருக்கிறார். பின்னர் 1980லிருந்து 1993வரை அவர் உச்சநீதிமன்றத்தில் இந்திய அரசின் வழக்கறிஞராக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெல்லி உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் 16 ஆண்டுகள் வழக்கறிஞராக பணிபுரிந்த ராம்நாத் கோவிந்த், 1971 இல் டெல்லி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக தம்மைப் பதிவு செய்து கொண்டார். 1994 ஆம் ஆண்டில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் இருந்து நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ராம்நாத் கோவிந்த், 12 ஆண்டுகள் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியிருக்கிறார்.

பழங்குடியினர், உள்துறை, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, சமூக நீதி, சட்டம் - நீதி அமைப்பு மற்றும் மாநிலங்களவை குழ என பல கமிட்டிகளில் உறுப்பினராக ராம்நாத் கோவிந்த் பணியாற்றியிருக்கிறார். கடந்த 1977ல் ஜனதா கட்சியின் ஆட்சியின் போது முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயின் உதவியாளராக கோவிந்த் பணியாற்றினார். இதுவே கோவிந்தின் அரசியல் வாழ்க்கைக்கு அடித்தளமிட்டது.

கடந்த 1990 மக்களவைத் தேர்தலில் பாஜக வேட்பாளராக களமிறங்கிய ராம்நாத் கோவிந்த், அந்த தேர்தலில் தோல்வியைத் தழுவினார். அதேநேரம், உத்தரப்பிரதேச மாநிலத்தில் இருந்து இரு முறை மாநிலங்களவை எம்பியாகவும் கோவிந்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். பாஜகவின் தலித் பிரிவான தலித் மோர்ச்சாவின் தலைவராக 1998ம் ஆண்டிலிருந்து 2002ம் ஆண்டு வரை ராம்நாத் கோவிந்த் பதவி வகித்துள்ளார். பாரதிய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் பொறுப்பையும் ராம்நாத் கோவிந்த் வகித்துள்ளார்.

தலித் சமூகத்தின் பிரதிநிதியாக பார்க்கப்படும் கோவிந்த், மாணவ பருவத்தில் எஸ்சி, எஸ்டி மற்றும் பெண்களுடன் இணைந்து சிறப்பாக பணியாற்றியிருக்கிறார். மேலும், பாஜனவின் மூத்த தலைவர்களின் நன்மதிப்பை பெற்றுள்ள இவர் அந்த கட்சியால் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு அதில் வெற்றியும் பெற்று, இந்தியாவின் 14 வது ஜனாதிபதி ஆகியுள்ளார்.

71 வயதான ராம்நாத் கோவிந்த இந்திய ஜனாதிபதியாக பதவியேற்றார் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிப்பெற ராம்நாத் கோவிந்திற்கு அரசியல் தலைவர்கள் உட்பட பலர் வாழ்த்துகள் தெரிவித்து வருகின்றனர். மொத்தம் 1069358 வாக்குகளில் ராம்நாத் கோவிந்த 702044 வாக்குள் பெற்று வெற்றுப்பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் ஆதரவு வேட்பாளர் மீராகுமார் 367314 வாக்குகள் பெற்றுள்ளார்.

ராம்நாத்தின் சம்பளம், தற்போது 3,00,000 ரூபாயாக உள்ள ஜனாதிபதியின் மாத சம்பளம் விரைவில் 5,00,000 ரூபாயாக மாற்றப்பட இருக்கின்றது. உலக நாடுகளினை ஒப்பிடும் போது இந்திய குடியரசு தலைவர் ராம் நாத் கோவிந் வசிக்க இருக்கும் வீடு மிகப் பெரியதாகும்.330 ஏக்கர் நிலத்தில் 2,00,000 சதுர அடியில் 340 அறைகள் கொண்ட ஒற்றைக் கட்டிட வீடு. இதில் நூலகங்கள், உணவகங்கள் எனப் பல தரப்பட்ட வசதிகள் கிடைக்கும். ராஷ்டிரபதி பவனில் இந்திய குடியரசு தலைவர் தங்க இருக்கும் வீட்டினை முறையாகக் கவனித்திகொள்ள 200 ஊழியர்கள். அது மட்டும் இல்லாமல் 5 செயலக ஊழியர்கள் உள்ளனர்.

இந்திய குடியரசு தலைவர் ராம் நாத் கோவிந்து ராஷ்டிரபதி பவனில் வசிக்க இருக்கும் வீட்டின் ஒரு வருட மிசாரக் கட்டணம் மட்டும் 6.7 கோடி ரூபாய்.ராம் நாத் கோவிந் அவர்கள் ராஷ்டிரபதி பவன் மட்டும் இல்லாமல் விடுமுறை தினங்களில் வசிக்க ஹைதராபாத் மற்றும் சிம்லாவில் ஓய்வு வீடுகள் உள்ளன. அது மட்டும் இல்லாமல் ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் இலவசமாக அரசின் செலவில் தங்க முடியும். கோவிந்த் வியப்பூட்டும் மெர்சிடிஸ் பென்ஸ் கார் பயன்படுத்த அளிக்கப்பட்டுள்ளது, இதில் புல்லட் ப்ரூப், துப்பாக்கிகள் போன்றவை உள்ளன.

இவரது வாகன பட்டியலில் முன்னல் குடியரசு தலைவர் பிரனாப் முக்கர்ஜி பயன்படுத்திய கருப்பு மெர்சிடிஸ்-பென்ஸ் உண்டு.இந்திய குடியரசு தலைவர்களுக்கு இந்தியாவின் மிக உயர்ந்து பாதுகாப்பான வகுப்புச் சேவைகள் அளிக்கப்படும். இவரது பாதுகாப்பிற்கு ராணுவத் துப்பாக்கி குண்டுகள், வெடி குண்டுகள் போன்றவற்றால் உயிற் சேதம் ஏதும் ஏற்படாத அளவிற்குப் பாதுகாப்புக் கவசம் அளிக்கப்படும்.

ஓய்வூதிய காலத்தில் தங்க வீடு, இரண்டு இலவச தரைவழி போன் மற்றும் ஒரு மொபைல் போன் வரம்பற்ற இணையதளச் சேவையுடன் வழங்கப்படும். இலவசமாக ரயில் மற்றும் விமானத்தில் பயணம் செய்யலாம். ஒவ்வொரு மாதமும் 205 லிட்டர் பெட்ரோல் இலவசம். சொந்தக் காரை பயன்படுத்த வாகன ஓட்டுநர்களுக்கு அரசங்கம் சம்பளம் அளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனி பாராளுமன்றத் தேர்தல் - 2017

German Federal Elections (Bundestag) - 2017

ஐரோப்பாவின் சனத்தொகையில் கூடியநாடு ஜேர்மனியாகும். அத்துடன் பொருளாதார வளம் மிக்க நாடாகவும் பலம்பொருந்திய நாடாகவும் இது விளங்குகின்றது. ஜனநாயக நாடாகக் கருதப்படும் இந்த நாட்டில் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்தின் தேர்தல் நடைபெறுவதுவழக்கமாகும். இவ்வருடம் ஐரோப்பாவில் நெதர்லாந்து, பிரான்ஸ் நாடுகளின் தேர்தல்கள்முடிவடைந்தது. தொடர்ந்து ஜேர்மனியின் தேர்தல் எதிவரும் 24.09.2017 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மிகவும் பரபரப்பாகப் பேசப்படுவதும் கணிக்கப்படுவதுமான இத்தேர்தலில் யார் வெற்றி பெறுவார் என்று தற்போது அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. ஜேர்மனியப் பாராளுமன்றத் தேர்தலை ஆங்கிலத்தில் கூறப்போனால் Federal Election என்றும் பாராளுமன்றத்தை டொச் மொழியில் Bundestag என்றும் அழைப்பார்கள். கடந்த 2005 ஆண்டு தொடக்கம் இன்றுவரை அங்கலா மாக்கல் அவர்களே நாட்டின் (Chancellor) கான்சிலராக இருந்து வருகின்றார். ஜேர்மனியின் அரசில் சட்டத்தின்படி கான்சிலர் அவர்களே அதிகமான அதிகாரம் பொருந்தியவராகக் கருதப்படுவார். (Bundes President) நாட்டின் தலைவர் என்பவர் நாட்டின் முதல் பிரசையும் கௌரவ தலைவராகவும் அழைக்கப்படுவார். நாட்டின் நிர்வாகத்தில் இவர் பங்குகொள்ளாத ஒருவராக இருந்துவருகிறார். தற்போதய தலைவரின் பெயர் Frank Walter Steinmeier. ஆனால் கான்சிலர் என்று அழைக்கப்படு பவருக்குத்தான் நாட்டின் அதிகாரம் மிக்கவராகக் காணப்படுவார்.

தற்போது கான்சிலராக இருக்கும் அங்கலா மார்கல் அவர்கள் இன்று உலகத்தால் பார்க்கப்படும் சிறந்த ஒரு பெண்மணியாகவும் அதிகாரம் மிக்க தலைவராகவும் மதிக்கப்படுகின்றார். இனி 24.09.2017 அன்று நடைபெற இருக்கும் தேர்தலைப்பற்றிய சில குறிப்புக்களைப் பார்த்தால்... மொத்தமாக 598 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படுவார்கள். ஒரு கட்சியில் 300 உறுப்பினர்கள் வெற்றிபெற்றால் அரசமைக்கலாம். இல்லையேல் தற்போதுள்ளது போல் கூட்டர சாங்கம்தான் அமையும். புதிய அரசாங்கம் 22.10.2017 தேதியில் பதவி ஏற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான கட்சியான CDU கட்சியுடன் வழமையாகக் கூட்டுச்சேரும் CSU கட்சி என இருகட்சிகளின் வேட்பாளராகத் தற்போதய கான்சிலர் மாக்கல் போட்டியிடுகின்றார். SPD கட்சியின் வேட்பாளராக ஐரோப்பிய பாராளுமன்றத்தின் உறுப்பினரும் தலைவருமாகக் கடமையாற்றிய மாட்டின் சுழ்ஸ் என்பவர் போட்டியிடுகின்றார்.


Angela Merkel


Martin Schulz

CDU/CSU

1. Christian Democratic Union
2. Christian Social Union

1. கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி
2. கிறிஸ்தவ சமூகக்கட்சி

SPD

Social Democrats

சோஸலிச ஜனநாயகக்கட்சி

அங்கலா மாக்கல்:- Angela Merkel

17.07.1954ல் கம்போர்க்கில் பிறந்தவர். பட்டதாரி. ஜேர்மனியின் பாராளுமன்றத்தில் முன்னர் பெண்கள் விவகார அமைச்சராகவும் சுற்றுச்சூழல் அமைச்சராகவும் இருந்து கடந்த 2005 தொடக்கம் ஜேர்மனியின் கான்சிலராக இருந்து வருகின்றார். CDU கட்சியின் நீண்டகால உறுப்பினரும் தலைவருமாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாட்டின் சூல்ஸ்:-** Martin Schulz

20.12.1955ல் மேற்கு ஜேர்மனி Hehlrath என்ற இடத்தில் பிறந்தவர். நூலகத்துறையில் கடமைபுரிந்தவர். 1994 - 2017 வரை ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். 2012 தொடக்கம் இற்றைவரை ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தலைவராகக் கடமைபுரிந்துவிட்டுத் தற்போது SPD கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். இவரும் SPD கட்சியின் நீண்டகால உறுப்பினராவர்.

இந்த இருவரில் ஒருவர்தான் அடுத்த கான்சிலராக வருவார். இருவரிடையேயும் கடும் போட்டி நிலவுவதாகக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஒரு கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காதபட்சத்தில் எந்தக்கட்சி எவரோடு கூட்டுச்சேர்ந்து அரசமைப்பார்கள் என்று தற்போது கூறமுடியாது. இந்தக் கட்சிகளைவிடப் பிரபலமில்லாத உதிரிக் கட்சிகளும் என 21 கட்சிகள் தேர்தல் களத்தில் குதித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

கடந்த தேர்தல் 2013ம் ஆண்டில் நடைபெற்றது அத்தேர்தலில் கிடைத்த ஆசனங்களும் வாங்குகளின் வீதமும்.

| | | |
|---|---|---|
| CDU+CSU கட்சிகள் | - 311 MP | - 41.5 வீதம் |
| SPD கட்சி | - 193 " | - 25.7 வீதம் |
| இடதுசாரிகள் கட்சி | - 64 " | - 08.6 வீதம் |
| பசுமைக்கட்சி | - 63 " | - 08.4 வீதம் |
| FDP கட்சி | - 34 " | - 04.8 வீதம் |
| மாற்றம் வேண்டிய கட்சி | - 33 " | - 04.7 வீதம் |

தற்போதய அரசியல் களத்தை எடுத்து நோக்கினால் வெளிநாட்டவர்களின் அளவுக்கு மிஞ்சிய வரவால் அகதிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசு திண்டாடுகின்றது. இதனால் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது. சமூக கட்டுப்பாடு, இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. நிதி நெருக்கடி, வேலையில்லாதோர் பிரச்சனை உயர்ந்துள்ளது. இப்படிப்பட்ட பல காரணங்களால் எந்த ஒரு தனிக்கட்சியும் தனி அரசை நிறுவமுடியாத சூழ்நிலை காணப்படுவதால் முடிவுகளைப் பொறுத்திருந்து பார்ப்போம். எமது அடுத்த இதழில் இது பற்றிய ஒரு சிறப்புப் பார்வை இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திலீபன்) பார்த்திபன் இராசையா 29.11.1963 - 26.09.1987



திலீபனின் நினைவேந்தலில் தாயாரால் ஈகச்சுடரேற்றல்

தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டத்தில் தன்னுயிரை ஈகம் செய்த தியாகி திலீபனின் (பார்திபன்) 30 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நல்லூர் தெற்கு வீதியில் உள்ள திலீபனின் நினைவுத் தூபி அமைந்திருந்த இடத்தில் 15-09-2017 காலை 10.10 மணியளவில் ஆரம்பமானதுநினைவேந்தல் நிகழ்வின் முதல் கட்டமாக கடந்த 23 ஆண்டுகளாக அரசியல் கைதியாக சிறையில் வாடும் தாயாரினால் தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு ஈகச் சுடரேற்றப்பட்டு அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமானது.

தியாகதீபம் திலீபன் உயிர்த்தியாகம் செய்து முப்பது ஆண்டுகள். அவரது தியாகத்திற்கு ஈடேது. இவரை நினைவுகொள்ளும் வகையில் உலகம் எங்கும் வாழும் தமிழ் மக்களால் இம்மாதம் முழுவதும் நினைஞ்சலி நிகழ்வுகள் நடைபெறுகின்றன. தமிழ் மக்களின் விடுதலைக்காக (24) இளம் வயதில் உயிர்த்தியாகம் செய்த தியாகிக்கு அஞ்சலியைச் செலுத்துவோம்!...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனிதமிழ் எழுத்தாளர்சங்கம் நடத்தும்

## கலைஞர்கள் கௌரவிப்பு + நூல் அறிமுகம்

காலம்: 14.10.2017. பிற்பகல் 14.00 மணி

இடம்: தமிழர்அரங்கம்
Rheinische Str – 76 – 80
44137 Dortmund

**கௌரவிக்கப்படுவோர்**

கவிஞர்முகில்வாணன்
கவிஞர் பசுபதிராஜா
எழத்தாளர் வி.ஜீவகுமாரன்
வில்லுப்பாட்டு ராஜன்



**நிகழ்ச்சிகள்**

மங்களவிளக்கேற்றல்
மௌன அஞ்சலி
தமிழ்மொழி வாழ்த்து
வரவேற்புரை
தலைமையுரை
வாழ்த்துரைகள்
நூல் அறிமுகம்
கலைநிகழ்வுகள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தொடர்புகளுக்கு

வ.சிவராசா
02038073898
v.sivarajah@arcor.de

பொ. புத்திசிகாமணி
029337493
ponmani@hotmail.de



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்து கொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

| | | |
|---|---|---|
| 01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் | - ஜேர்மனி | EURO |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா) | - 480-00 |
| 02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - மட்டக்களப்பு | - 480-00 |
| 03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரிசுவீஸ்லாந்து | | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - கிளிசொச்சி | - 480-00 |
| 04. செல்வன்.நகுல்.துரையரங்கன் | - ஜேர்மன் | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - திருகோணமலை | - 480-00 |
| 05. செல்வி.அஜந்தி.அழகராசா | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 |
| 06. திருமதி.பராசக்தி.பரமசாமி | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 |
| 07. திருமதி.ரதி.சின்னத்துரை | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 |
| 08. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 |
| 09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 |
| 10. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி | | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - மட்டக்களப்பு | - 240-00 |
| 11. செல்வி.சுகிர்தா தவராஜ் | - ஜேர்மனி | |
| ((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - கிளிநொச்சி | - 200-00 |
| 12. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - வவுனியா | - 200-00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 31-07-2017 +752-00

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

06. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00
08. திரு.கிறிஸ்ரி அமலதாசன் - London + 150-00
(தாயாரின் நினைவுநாள் அன்பளிப்பு)
09. திரு.ச.சத்தியகுமார் - Krefeld + 100-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

--------
+ 1502-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

\+ 1502-00

அனுப்பியது:-

(1)திருஞானசம்பந்தர் குருகுலம்-களுவாஞ்சிக்குடி -480-00


(2)சிறி சண்முகா பெண்கள்இல்லம்-திருகோணமலை-480-00

வங்கிக்கட்டணம் 2X35-00 -70-00

\------

1030-00

| | | | | |
|---|---|---|---|---|
| வங்கிவரி:- | 01.07.2017 - 31.07.2017 | 13-00 | | |
| | 01.08.2017 - 31.08.2017 | 9-76 | | |
| | | ------ | | |
| | | 22-76 | 22-76 | |
| | | | ------- | |
| | | | 1052-76 | - 1052-76 |
| | | | | --------- |
| | மீதி கையிருப்பு 31-08-2017 | | | + 449-24 |
| | | | | --------- |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிரும்வாழ்வு.............

2012 ம் ஆண்டு, தை மாதம், 06 ம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட இருபது கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மாற்றுத்திறனாளிகளை ஒன்றிணைத்து "ஒளிரும்வாழ்வு" அமைப்பு உருவாக்கப்பட்டது.

எமது அமைப்பானது மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் மருத்துவம், கல்வி, வாழ்வாதாரம் போன்றவற்றிற்கு அரச, அரசசார்பற்ற மற்றும் புலம்பெயர்ந்த எங்கள் உறவுகளின் உதவிகளையும் பெற்று உதவி வருகிறோம். தற்போது பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், தாய் தந்தையை இழந்த பிள்ளைகள், மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் போன்றோரின் நலனுக்காக பல்வேறு உதவித்திட்டங்களை ஆற்றி வருகிறோம்.

சமூகசேவைகள் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட எமது அமைப்பின் ஆலோசகராக துணுக்காய் பிரதேச செயலாளர் உள்ளார். இலங்கை வங்கி ஊடாக கணக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இதுவரை காலமும் தனிப்பட்ட வாழ்வாதார உதவிகளை வழங்கி வந்த நாம் தற்போது தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களை வருமானமீட்டுபவர்களாக மாற்றும் நோக்கில் பல செயற்திட்டங்களை உருவாக்கியுள்ளோம்.

மல்லாவி வைத்திய சாலை வீதியில் நிரந்தர அலுவலகம் அமைத்து எமது சேவையை தொடர்ந்து வழங்க உள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணி...

குறிப்பு : ( Kevelaer- Germany ) கேவலர் - யேர்மனியில் ஒலி-ஒளி இறுவெட்டு வெளியீட்டில் பங்குபற்றிய பார்வையாளர்களால் அன்பளிப்பு செய்த உதவிப்பணம் மூலம் ,மட்டக்களப்பு- பாட்டாளிபுரம் மாணவர்களுக்கு மிதிவண்டி அன்பளிப்பு .

Dr.வேலாயுதம் .சர்வேஸ்வரன் - London

அன்பான உறவுகளே...,
அண்மையில் எனது இலங்கை பயணத்துக்கு முன், நானும் என் மனைவியும் 04.06.2017 அன்று யேர்மனி-கேவலார் என்ற இடத்தில் திருமதி .கலைவாணி. எகானந்தராஜா அவர்களுடைய ஒலி-ஒளி இறுவெட்டு வெளியீட்டிற்காக அழைக்கப்பட்டிருந்தோம். திருமதி கலைவாணி அவர்களினால் உருவாக்கப்பட்டு வெளியீடு செய்து நிறைவேற்றப்பட்ட ஜெர்மனி - கிறீபீல்ட் நயினை நாகபூசணி பாமாலை பாடல் இறுவெட்டினை வெளியீடு செய்து அவரை கௌரவப்படுத்தும் வாய்ப்பினை ஏற்றுக்கொண்டோம். பாடல்கள் அனைத்தும், தென் இந்திய கலைஞர்களுக்கு ஈடாகப் பாடப்பட்டிருந்தமையை அவதானித்தோம். ஈழத்து இசைத்துறைக்கு திருமதி .கலைவாணியின் சேவை நீண்டகாலம் தொடரவேண்டும் என வாழ்த்துகிறோம் .

அத்துடன் அவ்விடத்தில் , இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான Assist RR's என்ற நிறுவனத்தின் வேலைத்திட்டங்களை பரப்புவதற்கான ஒரு சந்தர்பமாகவும் எடுத்துக்கொண்டேன். Assist RR's உடைய வேலைத்திட்டங்களையும் , போரால் பாதிக்கப்பட்ட மக்களுடைய தேவைகள் பற்றியும் ஒரு ஆவண விளக்க உரையை நான் செய்திருந்தேன். அந்த விளக்கவுரை பார்வையாளரிடையே நன்றாக உள்வாங்கப்பட்டதுடன், தொடர்ந்தும் ஜேர்மனியில் இதுபோன்ற ஆவண விளக்க உரைகளை நடாத்தவேண்டும் என்று கேட்டிருந்தனர். பார்வையாளர்களில் ஒருவர் , இந்த தேவைகளுக்காக நாமும் ஏதாவது பங்களிப்பு செய்யவேண்டும் எனக் கூறி ,பார்வையாளர்களிடம் பணம் சேகரிக்க தொடங்கினார். அங்கு 365 யூரோவாக உயர்ந்து எம்மிடம் கையளிக்கப்பட்டது . அந்த வறிய மக்களுக்களுடைய ஏதாவது தேவையை நிறைவேற்றுமாறு எங்களிடம் கேட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் யூன் 6 முதல் 15.2017 வரை இலங்கையில் நின்ற போது , பாட்டாளிபுரம் - மூதூரில் உள்ள பின் தங்கிய கிராமத்துக்கு சென்றிருந்தேன். அங்கு தமிழ் வேடுவர்கள் வசிக்கிறார்கள். மூதூரில் ஏழ கிராமங்கள் உள்ளன. அங்கு உள்ள ஆதிவாசிகள், தேன் எடுப்பதுவும் , விறகு வெட்டுவதும் ,வேட்டையாடுவதும் தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். பலவகைகளிலும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டவர்களாகவும் , தமது வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு உதவி தேவைப்பட்டவர்களாகவும் உள்ளனர்.

Assist RR's நிறுவனத்தினர் பாடசாலைப்பிள்ளைகளுக்கு மிதிவண்டியும் , பாடசாலை முடிந்தபின் மேலதிக கல்வி உதவியும் செய்ய முன்வந்துள்ளனர். எங்களுடைய வாக்குறுதியில் அவர்கள் நம்பிக்கையற்றவர்களாக காணப்பட்டனர். காரணம் அவர்கள் கூறினார்கள் "எத்தனையோ பேர் வந்தார்கள் ,போனார்கள் அவர்களிடமிருந்து எந்த உதவிகளோ , ஆதரவோ கிடைத்ததில்லை" என வருத்தம் தெரிவித்தனர் .

இலங்கைக்கான எமது நிறுவனத்தின் தலைவர் திரு. கென்றி அமல்ராஜ் மீண்டும் பாடாளிபுரம் சென்று , யேர்மனி - கேவலார் 04.06.17 இல் ஒலி - ஒளி இறுவெட்டு வெளியீட்டுவிழா பார்வையாளரான இடம்பெயர் தமிழர்களால் திரட்டப்பட்ட உதவிப்பணத்தில் , ஆறு மிதிவண்டிகள் கொள்வனவுசெய்து அந்த பகுதி மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டது . திருமதி. கலைவாணி அவர்களின் இறுவெட்டு வெளியீட்டுவிழாவில் இந்த பங்களிப்பை வழங்கிய அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் . நன்றி!...வணக்கம்!...

---

## தகவல்:-

-உலகத்திலே மிக அதிகமான புத்தகங்களைக்கொண்ட நூலகமாக அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் நகரில் அமைந்துள்ள நூலகம் விளங்குகின்றது. இங்கு சுமார் 38 மில்லியன் புத்தகங்கள் இருக்கின்றனவாம்.

-உலகத்திலேயே மிகச்சிறிய புத்தகம் ஜேர்மனியிலுள்ளது. இந்தப்புத்தகத்தின் உயரம் 2.9 செ.மீ, அகலம் 2.4 செ.மீட்டராகும். இப்புத்தகத்தின் பெயர் "Bilder-ABC" என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்த 1950ஆண்டில் தாயகத்தில் வெளிவந்து 1993ம் ஆண்டளவில் யேர்மனியில் வெளியாகி இன்றுவரை வெளிவந்துகொண்டிருக்கும் வெற்றிமணி பத்திரிகையின் "விருதும் விருந்தும்" என்னும் நிகழ்வு கடந்த 16.09.2017 சனிக்கிழமை யேர்மனி சுவெற்றா நகரில் சிறப்பாக நடைபெற்றது.

வெற்றிமணியின் படைப்பாளிகள், ஆக்கதாரர்கள், வாசகர்கள், விளம்பர வள்ளல்கள், சமயப் பெரியார்கள் என ஒன்றுகூடி விழாவைச் சிறப்பித்தனர். நடனம், வீணை, மிருதங்கம், திரையிசை நடனம், ஒளியும் ஒலியும் கலை நிகழ்வுகளுடன் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன. வெற்றிமணிக்கு எழுதிவரும் எழுத்தாளர்களும் வெற்றிமணியின் சிவத்தமிழ் சைவ சமய இதழின் எழுத்தாளர்களும் சிறப்புக் கௌரவ பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

யேர்மனியின் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த பெருந்தொகையான அபிமானிகள் விழாவில்கலந்து கொண்டனர். தாயகம் இந்தியா நாடுகளில் நம் நாட்டுக்கலைஞர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படமும் காண்பிக்கப்பட்டது. வெற்றிமணியின் பிரதம ஆசிரியர் திரு மு.க.சிவகுமாரனின் கலைப் பயணம் எழுத்து ஊடக பத்திரிகைப் பணிகளையும் அவரோடு கொண்டிருந்த அன்பு, நட்பை பல பிரமுகர்கள் பாராட்டி மகிழ்ந்து அவருக்குப் போன்னாடை போர்த்திக் கௌரவித்தமை சிறப்பான விடையமாகும்.

விழா முடிவில் நாவிற்கினிய இராப்போசனமும் (விருந்தும்) சகலருக்கும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. வெற்றிமணியின் பயணம் பல்லாண்டுகள் தொடர வேண்டுமென மண் சஞ்சிகையினரும் வாழ்த்தி நிற்கின்றார்கள்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம் யேர்மனி...

## கிராமிய பூபாளம்

அன்பான எம் புங்கையூர் கிராமத்து உறவுகளே!...

30-09-2017 அன்று நடைபெற இருக்கும் புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் கிராமிய பூபாளம் என்னும் கலை மாலைப்பொழுது நிகழ்ச்சியில் எம் புங்குடுதீவு மண்ணைச் சேர்ந்தவர்களின் சந்ததிகள் யேர்மனியில் பிறந்து பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மாணவர்கள் (தற்போது ஐரோப்பா நாடுகளில் எங்கு வாழ்ந்தாலும்) எமது விழா மேடையில் கௌரவிக்கப்படவுள்ளனர். அவர்கள் அதற்கான கல்வித் தகமைகளுக்கான சான்றிதழ்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு அழைப்பு விடுகின்றோம்!..

Mahalingam Kanesu
Gustav-bohm Str-67
58256-Ennepertal - Germany e.mail ptt.sarvodayam@hotmail.com

---

## விளையாட்டுப் போட்டியும் பேச்சுத்திறன் போட்டியும்

யேர்மனி-எசன் நகரில் கடந்த இருபத்தேழ வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் எசன் தமிழ்மொழிச்சேவை கலாச்சார மன்றத்தின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த 16.09.2017ல் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வருடா வருடம் நடைபெறும் பாடசாலை மாணவர்கள் பழைய மாணவர்களுக்கான தமிழ்த்திறன் போட்டிகளாக பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, பொது அறிவுப்போட்டி எனப் பல்வகைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

காலம்:- 07-10-2017 சனிக்கிழமை

விபரங்களுக்கு:- விக்கி-0201-8153644
சாந்தினி-0201-6493264



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Firstaudio வின்

# Germany

# PMP-180

## எம்மவர் கலைத்திறன்களின் சங்கமம்

# 14.10.2017

## பொன்மாலைப்பொழுது

### அடுத்த தலைமுறை நோக்கி!... மாற்றுத்திறன்களின் சங்கமம்!..

உலக தமிழ் ஊடகப்பரப்பில் எந்த ஒரு வானொலியாலும் முன்னெடுக்கப் படாதது பொன்மாலைப் பொழுது நிகழ்வாகும். லண்டன் தமிழ் வானொலியின் 180வது பொன்மாலைப் பொழுது நிகழ்வு 14.10.2017 அன்று யேர்மனியில் நடைபெறவுள்ளது. நடந்துமுடிந்த 179 மேடை நிகழ்வுகளும் இங்கிலாந்து, யேர்மனி, சுவிஸ்லாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து நாடுகளில் நடைபெற்றன. இளந்தலைமுறையினராலேயே இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விழா சிறப்பாக நடைபெற்று இளந்தலைமுறையினர் பல்துறை விற்பனர்களாக வளர்ந்து உயர்ந்திட நாமும் வாழ்த்தி மகிழ்கிறோம்..

விழா.......திகதி 14.10.2017 சனிக்கிழமை
இடம் Schul Str-22
52538 Gangelt-Hastenrath

தொடர்புகள்:- 004924519153048



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ஃநாவற்குழி மகாவித்தியாலயம்

**J/NAVATKULI MAHA VIDYALAYAM**
**Kaithady**

**Mr.S.Pavalakumaran B.Ed. ,Sc.Trd.** **Mrs.S.Selvarajah B.A Dip.in.Edu.**

**Principal S.L.P.S.Class-1** **T.P. N.o :0212050901** **Assistant Principal**

**S.L.T.S. Class – 1**

10.07.2017

திரு.வ.சிவராசா,

ஜேர்மனி.

அன்புடையீர்,தங்களால் வெளியீடு செய்யப்படும் மண் சஞ்சிகை இதழ்கள் கிடைக்கப்பபெற்றன. தாங்கள் தொடர்ந்து இச்சஞ்சிகையை இப்பாடசாலைக்கு அனுப்பிவருவதையும் நான் அறிந்து கொண்டேன். அந்தவகையில் கன-தியான பல்வேறு ஆக்கங்களை தாங்கிவரும் தங்களது சஞ்சிகையானது மாணவர்களின் வாசிப்புத்திறன் மற்றும் எழுத்தாற்றல் என்பவற்றை மேம்படுத்த உதவும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே தங்களது பணியை மனமார வாழ்த்துவதோடு தொடர்ந்தும் இச்சஞ்சிகையை எமக்கு அனுப்பிவைக்குமாறு அன்போடு வேண்டுகின்றேன்.

அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் காணாமல்போன உறவுகளின் போராட்டம்




laham Foundation
avanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 185




## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்

Dr Xavier S Thaninayagam

02.08.1913 - 01.09.1980

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 15€ |
| | ஏனைய நாடுகள் | 20€ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org